உ

குமரன் துணை.

விவேகபாநு.

வால்யூம் 5 } 1906௵ ஏப்ரல் ௴ { புத்தகம் 4

சுரேந்திர நாதர் தண்டிக்கப்பட்டது.

பெங்காளத்தின் ஒரு பகுதியாகிய பாரிஸாலில் நடந்த கொடுமையைப்பற்றி மற்றோர் பக்கத்தில் விரிவாகக்கூறப்பட்டிருப்பதை நம் பத்திரிகைநேசர் பார்த்துக்கொள்ளலாம். அதன் சுருக்கம் யாதெனில் பாரிஸாலில் ஒரு மாகாணக்கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்திற்கு கல்கத்தாவிலிருந்து பலதேசாபிமானிகள் சென்றனர். அவர்கள் வந்ததும் வந்தே மாதரம் என்ற பஜனை நடந்தது. அவ்வூரார் அவர்களை மரியாதையாகத் தெருவழியாய் அழைத்துக்கொண்டுபோகையில் வந்தே மாதரம் என்ற கோஷத்தோடு சென்றனர். இது அவ்வூர் அதிகாரிகளுக்குப் பொறுக்கவில்லை. போலீஸ்காரர் அப்படிச்செல்லும் மகாநாட்டின் முன்னணியை விட்டுவிட்டுப் பின்னர் சென்றவர்களைத் தாக்கி நையப்புடைத்து அச்சுறுத்தினார்கள். கலகமும் குழப்பமும் உண்டாகவே முன்னணியிற் செல்லும்பெரியோர்கள் பின்வந்து கலகத்தை நிறுத்தப் பிரயத்தனம் செய்தும் முடியவில்லை. போலீஸ்தார் தங்கள் கொடுமைகளை நிறுத்தவில்லை. போலீஸ் சூபரிண்டெண்டு நம் தலைவராகிய மிஸ்டர் சுரேந்திரநாதரைக் கைதியாக்கினர். அச்சமயம் பல பெரிய மனுஷர் தங்களையும் கைதிகளாக்கும்படி கேட்டுக்கொண்டும் சூபரிண்டெண்டு மறுத்தனர், உடனே சுரேந்திரநாதரை மாஜேஸ்டிரேட் முன் குற்றஞ்சாட்டினர். உடனே அம்மாஜேஸ்டிரேட்டும் விசாரணைதொடங்கினர். விசாரணைகாலத்திலேயே நம் சுரேந்திரநாதருக்கு ரூ 200 கோர்டாரை அவமானம் செய்ததற்காக என்று அபராதம் விதிக்கப்பட்டது. பிறகு சு

க்கார் உத்தரவை மீறிநடந்த குற்றத்திற்காக ரூ. 200 பின்னும் அப ராதம் விதிக்கப்பட்டது. உடனே அபராதத்தைச் செலுத்திவிட் டனர். மறுநாள் மாகாணக்கூட்டம் கூடிற்று, அதன்மத்தியில் போ லீஸ் சூபரிண்டெண்டு வந்து ஜனங்கள் கூட்டம் முடிந்து வெளியே போகுங்கால் வந்தேமாதரம் உச்சரிக்கக்கூடாதென்றும் அப்படிச் செய்வதற்கு அக்கூட்டத்தின் தலைவர்கள் ஜாமீந்தாரிகளாயிருக்கவே ண்டுமென்றும் அப்படி அவர்கள் செய்யமுடியாவிடின் அக்கூட்டத் தை நடத்தக்கூடாதென்றும் சொல்லவே தலைவர்கள் தங்களால் வந் தேமாதரம் சொல்வதைத் தடுக்கமுடியாதென்றும் தாங்கள் கலைந்து போகச் சித்தமாகவிருப்பதாகவும் தெரிவித்தார்கள். உடனே கூட் டங் கலைந்துவிட்டது. மீட்டிங்கும் அரைகுறையாகவே நின்றுவிட் டது. இதுதான் அச்சம்பவத்தின் சுருக்கம்.

தர்ம இராஜ்யமாகிய பிரிட்டிஷ் அரசாக்ஷியிலும் இவ்வநீதம்நட க்குமானால் மற்றக் கொடுங்கோன் மன்னர் வாழுநாட்டில் ஜனங்கள் படும் பாட்டுக்குக் கேட்பானேன். முதலாவது வந்தேமாதரம் என் று சொல்வதால் அரசாங்கத்தாருக்கு யாதுகேடுண்டாகுமோ தெரிய வில்லை. இராஜ விசுவாசத்துக்கும் காரணமாகிய இத்தேச விசுவாச மொழிகளை ஜனங்கள் சொல்லாமல் தடுத்தால் ஜனங்களுக்குள் இராஜ விசுவாசம் குறைய அல்லவோ காரணமாகும். எத்துணையோ காலம் கொடுங்கோலரசுக்குட்பட்டு வாழ்ந்து இப்பொழுதுதான் நம் இரா யம் கலகங்களும் குழப்பங்களும் அடங்கிச செங்கோல் ஆளுகைக்குட் பட்டு நடந்துவருகிறது. நம் ஜனங்களுக்குப் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் இருக்கப்பட்ட நம்பிக்கையும் இராஜவிசுவாசமும் வேறு எந்த அந்நி ய அரசர்களிடமும் இருந்ததில்லை. சுதேச அரசர்களிடத்தும் சில பேரிடத்தே இவ்வித இராஜவிசுவாசம் இருந்துவந்தது. அப்படியிரு க்கிற சமயத்தில் இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் இராஜாங்கத்தாரின் மனோபாவத்தை நன்கு அறியாமல் ஜனங்களை அநீதியாய் நடத்துவ ர்களானால் ஜனங்களுக்கு இராஜவிசுவாசத்துக்குக் குறைவுநேரிடாதா. ஜனங்கள் செய்த குற்றமென்ன? நினைத்தபடி அநீதியான உத்தரவு களைப் பிறப்பித்து ஜனங்கள் அதை மீறி நடக்கிறார்களென்றால் யார் குற்றம். ஊர்கோலம் போவதைத் தடுப்பதற்குச் சட்டம் சிறிதும் இடங்கொடுக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் பாரிஸால் உத்தியோ

கஸ்தர் செய்த அநீதம் எத்தேசத்தாரும் வெறுக்கத்தக்கதாயிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடத்தில் நாம் அடைந்த மேலான தனம் நம் சுயாதீனமே. இவ்வித சுயாதீனம் நம் படித்த அறிவாளிகளுக்கு இல்லையென்றால் இந்த அரசாட்சி செங்கோல் அரசாட்சி என்பதற்குப் பங்கம் நேரிடுமன்றோ! ஆகையால் நம் இராஜாங்கத்தார் இச்சம்பவத்தைத் தீரவிசாரித்து ஜனங்களுக்கு நியாயம்கொடுப்பார்களாக! இராஜாங்கத்தாரிடம் மேன்மேலும் இராஜவிசுவாசம் உண்டுபண்ணும்வண்ணம் உத்தியோகஸ்தர் நடவடிக்கைகளை நடத்த வேண்டுமேயொழிய இவ்வாறு நினைத்தபடியெல்லாம் சட்டங்களைப் புரட்டுவது இருவர் க்ஷேமத்துக்கும் குறைவே. இந்தியர்களைப் பக்ஷமாய் நடத்தியபோது அவர்கள் காட்டிய விசுவாசத்துக்கும் அவ்வாறு நடத்தப்படாத சமயத்தில் அவர்கள் காட்டிய வெறுப்புக்கும் சரித்திரமே தக்க சாக்ஷியாகும். மேலதிகாரிகள் கீழ் அதிகாரிகளின் கொடுஞ்செயல்களைத் தக்கவண்ணம் கண்டித்து ஜனங்களுக்கு மன ஆறுதல் உண்டாகும் வண்ணம் நடவடிக்கைகளை நடத்தி நியாயஞ் செய்வார்களென்று நம்புகின்றோம்.

“குடியுயரக் கோனுயரும்” என்பது ஆன்றோர் வழக்கு ஆகையால் உலகம் ஒப்பும்படியான செய்கைகளைச் செய்து ஜனரஞ்சிதத்தை உண்டாக்குவதே உத்தமவதிகாரிகளின் கடமையாகும். பாரிஸாலை ஆளும் ஸர்புல்லரும் இச்செய்கைஅநீதமென்றும் இதுவிஷயம் யாதொன்றும் தமக்குத் தெரியாதென்றும் கூறுகின்றனராம். அதற்கு நியாயம் கூறவேண்டியவர்கள் நம் சகோதரராகிய ஆங்கிலநாட்டார்களே. அவர்களே நம் அடிமைத்தன்மையை ஒழிக்கவல்லவர். அவர்களே நமக்கு நியாயம் கொடுப்பவர். அவர்களே நம்மைக் கைதூக்கி விடப்பட்டவர். அவர்களும் அநாதரவுபண்ணுவார்களானால் நம் கதி அதோகதியே. நம்மவர் முயற்சியைக்கைவிடாது எங்கு நியாயம் கிடைக்கவேண்டுமோ அந்த இடத்தில் போராடவேண்டும். “கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்” என்ற மதக்கொள்கையையுடைய நம் பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் நாம் கேட்டால் சும்மாவிரார்கள். ஆனால் நாம் கேட்கத் தவறக்கூடாது. கேட்குங்கால் நமக்குப் பாரம்பரைச் சொத்தாகிய நம் இராஜவிசுவாசத்தையும் கைவிடக்கூடாது. மன்பதை யோம்புதலே நம் காருண்ய அரசாங்கத்தாரின் கொள்கையாதலால் நம்பின நம்மைச் சிறிதும் கைவிடார்கள் என்பது திண்ணம். தருமமே தலைகாக்கும். நம்மவர் மட்டும் முயற்சியில் பின்வாங்காதவராக இருத்தல்வேண்டும். முயற்சி திருவினையாக்குமென்பது திண்ணம்.

பத்திராதிபர்.

கிராமங்களின் சீர்திருத்தங்கள் II.

கிராமத்தார் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்களாவன. முதலாவது விவசாயம் அல்லது கிருஷித்தொழில். இதுவே கிராமத்தாருக்கு முக்கியமான விஷயம். இதனைக் கிராமத்தார் முன் போல் அவ்வளவு கருத்தாகக்கவனிக்கிறதில்லை. வித்துக்களைச்சேர்ப்பதில் முன் போல் விவசாயிகள் கண்ணுங் கருத்துமாயிருக்கிறதில்லை. அதனாலேயே விவசாயத்துக்குக் கேடுறுகின்றது. விதையை நன்றாகத் தூற்றிக் காயப்போட்டு கோட்டையாகக் கட்டவோ அல்லது குதிர்களில் சேர்க்கவோ செய்கிறதை விட்டு "அவசரக்கோலம் அள்ளித் தெளி" என்று அவசரப்பட்டு விதையைச் சேர்த்து வைக்கிறார்கள். ஆகையால் இது விஷயத்தில் தக்க ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டுவது கிராமத்தாரின் கடமை.

இரண்டாவது உழுகிற விஷயம் ஒரு உழவுக்கு நான்கு உழவாக அடித்து நிலத்தைப்பண்படுத்துவது முற்காலத்தாருடைய வழக்கம். குடியானவர்களோ பள்ளர்களோ யஜமானனிடம் விசுவாசமுள்ளவர்களாயிருந்து யஜமான் பார்வையிட்டாலும் பார்வையிடாவிடினும் செய்வன திருந்தச்செய்வார்கள். தற்காலத்திலோ அவ்வேலைக்காரர்களுக்குப் பட்டணங்களிலும் வேறு இடங்களிலும் தக்க கூலிகிடைப்பதால் அதற்கு ஆசைப்பட்டு விவசாயத்தைக் கருத்தாகச்செய்கிறதில்லை: தற்காலத்தில் எத்துணையோ சீர்திருத்தமான கலப்பைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் மிகவும் பளுவானதைவாங்கி ஏமாந்து போகாமல் சுலபமான விலையுள்ள சிறு கலப்பைகளை வாங்கி நிலத்தை ஆழ உழுது பக்குவப்படுத்தி வேர்வாரிகளைக்கொண்டு வேர்களை அரித்து நிலத்தைச் சமமாகச்செய்து பின் விதைக்கவேண்டும். இந்தியாவிலுள்ள நிலங்களை ஆழமாகவும் உழுதல்கூடாது மேலாக நிலத்தைக் கீறிக்கொண்டுமட்டும் போகக்கூடாது. முற்காலம் போலவே உழுவதில் சற்று ஆழ உழுதல் போதுமானது.

மூன்றாவது நாற்றுப்பயிர்செய்தல். இது விஷயத்தில் கிராமத்தார் காலமறிந்து வேலை செய்தல் வேண்டும். நாற்றை முற்றும்படி

விட்டுவிட்டாலும் அல்லது ஜலம் இல்லாமல் காயவிட்டாலும் பயிர் கெட்டுப்போகும். ஆகையால் பட்டத்தை அநுசரித்து எங்கெந்தக்காலத்தில் எங்கெந்த விதம் செய்யவேண்டுமோ அவ்வவ்விதம் செய்து அதைக்கண்ணிமைக்காக்கின்ற இமையிற்காக்கவேண்டுவது கடமை. பட்டந்தப்பினால் நஷ்டமன்றோ? யஜமான்தானே இவ்விஷயத்தில் கவலை செலுத்தினாலல்லது வேலைக்காரர்களைமட்டும் நம்பிவிட்டால் மோசம் போய்விடுவான்.

உண்மையும் விசுவாசமுமுள்ள வேலைக்காரர்கள்எப்பொழுதும் கிடைப்பது அரிது. ஜலம் வரத்து இல்லாவிடில் கிணற்று இறைவையாவது வைத்துக் கஷ்டப்பட்டு நாற்றைக்காப்பாற்றுவிடில் பயிர் நாசமாய்விடும்.

நான்காவது நிலத்துக்குத்தக்க வித்தை விதைத்துச் சாகுபடி பண்ணவேண்டும். அதற்குத்தக்க எருக்களை இடவேண்டும். எல்லா நிலத்துக்கும் எல்லா விதையும் எல்லா எருவும் பொருந்தலாகா. இது நிற்க. நம் குடியானவர்கள் ஒரே நிலத்தில் ஒரே நெல்லைப் பல வருஷங்களாகச் சாகுபடி பண்ணிவருவதால் ராசி சரியாகக் கண்டதில்லை. இரண்டு வருஷங்களுக் கொருமுறை பயிர்களை மாற்றவேண்டும். அதற்குத்தக்க எருவை முன்னரே தேடி வைத்துக்கொண்டு அவ்வெருவை இட்டுப் பண்படுத்தித் தக்க வித்துக்களையும் விதைத்தால் பயிர் நன்றாகப்பிடிக்கும். நஞ்சை நிலத்தில் கிழங்கு, மஞ்சள், கரும்பு, கடலை, கேழ்வரகு முதலிய பலவிதமான சாகுபடிகளைச் செய்தல் நலம். நெல் ஒன்றையே போட்டுக் கெட்டுப்போகிறார்கள். இதுவிஷயத்தில் எத்துணையோ சீர்திருத்தங்கள் இருக்கின்றன. அவைகளை ஊராரெல்லாம் கவனித்து ஒற்றுமையாயிருந்து எவ்வெவ்விதம் மாற்றிச் சீர்திருத்தவேண்டுமே அவ்வாறு செய்தல் நலம். முக்கியமாகப்பெரிய குடித்தனக்காரர்கள் தங்கள் நிலங்களில் இவ்வித சீர்திருத்தங்களைச் செய்து மற்றவர்களுக்குக் காட்டவேண்டும். சீர்திருத்தங்களும் அதிக செலவின்றி இலாபகரமாக இருத்தல் வேண்டும். அந்நிய நாட்டாருடைய வழக்கங்களை நாம் நன்மையாயிருந்தால் மட்டுமே அனுசரித்தல் நலம். பழைய வழியாயிருந்தாலும் புதுமாதிரியாக இருந்தாலும் எது நன்மையோ அதனையேகைக்

கொள்ளல்வேண்டும். நஞ்சை சாகுபடி செய்யப்பட்டவர்கள் மாடுக ளின் மேய்ச்சலுக்குப் புல் தரிசுகள் ஏற்படுத்திக்கொள்ளுகிற வழக் கம் இத்தேசத்தில் அதிகமாக இல்லை. விஸ்தாரமான மேய்ச்சல் தரைகளும் படுகைகளும் இல்லாத ஊர்களில் இவைமிக்க அவசியம். அதனால் குடியானவனுக்கும் அவனது கன்று காலிகளுக்கும் உண் டாகும் சௌகரியம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. வரவரக் கிராமங்களில் மந்தைகளையும் தரிசு நிலங்களையும் திடல்களை யும் வெட்டி நஞ்சையாக்கி விடுகின்றனர். அதனால் மாடுகள் நிற்க வும் சுவேச்சையாய் மேயவும் இடமில்லாமல் க்ஷீணித்துப் போகின் றன. தோப்புத்துரவுகளெல்லாம் அநியாயமாய்த் தொலைந்துபோகி ன்றன. அவைகளைப் பரிபாலனம் பண்ணவேண்டியது கிராமத்தா ரின் கடமை. மாடுகளே விவசாயிகளுக்கு தனம் முற்காலத்தில் ஒரு வருடைய தனத்தை அவரவர் மாடுகளாலேயே அளவிடுவது வழக் கம் இப்பொதும் அவ்வழக்கம் முற்றிலும் நீங்கிப்போகவில்லை. ஆ கையால் மாடுகளின் சௌகரியங்களுக்கு ஊர்ப்பொதுவில் மேய்ச்சல் தரைகளும் மந்தைகளும் கிராமங்களின் நாலாபக்கங்களிலும் இருத் தல் அவசியம். முன்னோர் வழக்கமே இது விஷயத்தில் சிலாக்கியமா யிருந்து வந்தது. மாடுகள் அபிவிருத்தியாவதற்கும் மந்தைகளே முக்கியம். சூலம் போட்டகாளைகள் பொலி எருதுகளாக இருந்து மாடுகள் விருத்தியாவது இயல்பு.

ஐந்தாவது நீர்ப்பாய்ச்சல் விஷயமாய் சிற்சில சமயங்களில் மு றைகள் நேரிடுகின்றன. முற்காலத்தில் தர்மாதர்மங்களை அனுசரி த்து எல்லோருக்கும் சௌகரியமாயிருக்கும்படி ஏற்பாடு செய்வார் கள், இப்பொழுதோ பெரிய குடித்தனக்காரர்கள் இது விஷயத்தில் புரிந்துவரும் கேடுகள் பல. ஏழைகள் பாடு திண்டாட்டமாய் விடுகி றது. கிராம வழக்கத்துக்கு விரோதமின்றி தர்மா தர்மங்களை அனு சரித்து இவ்விஷயத்தை நடத்தல் வேண்டும். கோடைக்காலத்தில் வாய்க்கால் வெட்டைப்பற்றிக் கிராமத்தார் கவனிக்கவேண்டும். அ நேகம் ஊர்களில் சில வாய்க்கால்களை வெட்டுகிறதே இல்லை. சில கிரா மங்களில் வாய்க்கால் வெட்டைத் தண்ணீர்வருகிற சமயத்தில் வைத் துக்கொள்வது வழக்கம். அதனால் அவ்வாய்க்கால் முழுவதும் வெட் டப்படாமல் அரைகுறையாக நின்று விடுவது வழக்கம். பிரயாசைப்

பட்டுப் பொதுஜன நன்மைக்கு உழைக்கப்பட்டவர்களைப் பலர் நாமா காணிமேல் ஈரரைக்கால் போட்டுக்கொண்டு குறை கூறுவார்கள். அதனால் கிராமங்களில் பெருமனஸ்தாபங்கள் உண்டாகின்றன. வசூல் செய்த நெல்லோ பணமோ சரியாய்ச் செலவிடப்படுகிறதில்லை. சிலர் வரிகொடாமல் மோசஞ் செய்தும் வருவார்கள். வரி கேட்கப் போனால் பல குற்றங்கள் கூறி தாங்கள் கொடாமலிருப்பதற்கு வழி தேடுவார்கள். இதனால் உழைப்பவர்களுக்கு அசிரத்தை உண்டாகிக் கிராம க்ஷேமத்துக்கு இடையூறு உண்டாகின்றது. இது விஷயத்தில் கிராமத்தார் தக்க ஏற்பாடுகளை அனுசரித்தல் நலம். அவைகளைப்பற்றி பின்னர்க் கூறுவோம்.

ஆறுவது ஊருக்குப் பொதுவான கோவில் சொத்து தர்மசொத்து முதலியவைகளைய பரிபாலனம் பண்ணல் 'தனவான் பலவான்' யென்று தற்காலத்தில் சில தனவந்தர்கள் ஊர்ப்பொதுவான சொத்துக்களை வாயில்போர்ட்டுக்கொண்டு கேட்பாரின்றிக் காலம் கழித்து வருகிறார்கள். தர்ம சொத்துக்களைப் பரிபாலிப்பதில் எவர் எவர் அசிரத்தையாயிருந்து வருகிறார்களோ அவர்கள் தலைமேல் பாவமும்சுமையாகிறது. தங்கள் அசிரத்தையால் பிறர் அச்சொத்துக்களைக்கொள்ளையடிக்கும்படி விடப்பட்டவர்களும் அப்பாபத்துக்குப் பங்காளிகளாகிறார்கள். ஆகையால் அச்சொத்துக்களைப் பரிபாலிப்பதில் மிக்க கவனமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும்.

ஏழாவது கிராமத்தின் சுகாதாரங்களைக் கவனிக்கவேண்டியது. மேற்கூறியவற்றிலெல்லாம் முக்கியமானது ஊரைச்சேர்ந்த குடிதண்ணீரைப்பற்றி மிக்க கவலையெடுத்துக் கொள்ளல் கிராமத்தாரின்முக்கிய கடமையாம். குடிதண்ணீர்க் குளங்களையும் கிணறுகளையும் சரிவரக் காப்பற்றவேண்டும். காவல் செய்யப்படாவிடில் அவைகளால் கிராமத்தாருக்கு விளையும் கேடுகள் பல. ஊரில் வியாதிகள் பரவுவதற்கு நல்ல குடி தண்ணீரில்லாததே முதற்காரணம். இதனை உத்தேசித்தே தொத்து வியாதியை உண்டுபண்ணத்தக்க ஈனஜாதியாருக்கென்று கிராமத்தார் பிரத்தியேமானக் கிணற்றை ஏற்படுத்துவது வழக்கம். குடிக்கிற ஜலத்தில் ஸ்நானம் செய்யவாவது துணி துவைக்கவாவது செய்தல் கூடாது. இவற்றால் உண்டாகும் அழுக்கால் கொடிய வியாதிகள் உண்டாகும். ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட

விஷயங்களைக் கிராமத்தார் நன்கு கவனித்து வந்தால் போதுமானது தற்கால மேற்றிசைச்சுகாதாரங்களைப்போல் எத்துணையோ அரிய விஷயங்கள் நம் ஸ்மிருதிகளில் அமைந்துகிடக்கின்றன. தெருக்களைப்பெருக்கிச் சுத்தமாக வைக்கவேண்டும். அசுத்தங்களைத் தெருக்களில் செய்து அவைகளை ஆபாஸப்படுத்தல் கூடாது. குப்பைகளைத் தூரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும்.

எட்டாவது வித்தியா பரிபாலனம். முற்காலத்தில் கிராமங்களே கல்வியில் செழித்து விளங்கின. இது விஷயத்தில் கிராமத்தார் செய்து வரும் அசிரத்தைக்கு ஈடாக நாம் எதையும் சொல்லோம். அறிவாலேயே எல்லா நன்மைகளையும் நாம்அடையவேண்டும். அஃது இல்லாவிடின் சர்வமும் சூன்யமே, ஆகையால் கிராமத்தார் தங்கள் தங்கள் அறிவையும் மக்களறிவையும் விருத்திபண்ணத்தக்க ஏற்பாடுகள் செய்துவரவேண்டும். முற்காலத்தில் தெருத்திண்ணைகளில் மாதந்தோறும் ஏதாவது அறிவூறுத்தத் தக்க புராணங்களைப் படிப்பது வழக்கம். ஸ்திரீகள் சூத்திரர்கள் முதலிய சகலரும் கேட்டு அறிவடைவது வழக்கம். அவ்வழக்கங்களைப் பின்பற்றி நடந்தால் தேசத்துக்கு க்ஷேமம் உண்டு. கிராமபாடசாலைகளையும் கிராமத்தார் தக்கவண்ணம் போஷித்தல் வேண்டும்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

பொதினா.

பூமியின்மீதுண்டாகும் விருக்ஷவகைகளிலும், செடி கொடி வகைகளிலும் பொதினாச்செடியும் செடி வர்க்கத்தில் சேர்ந்ததாயிருக்கின்றது. இப்பொதினாச் செடியைப் புதினா வென்றும் பல்லோர் பகர்வாராகின்றனர். பல செடி கொடிகளின் உற்பத்தியைக் காட்டிலும் இப்பொதினா உற்பத்தியாகும் வகை மிக்க ஆச்சரியகரமானதும் நமது பத்திரிகாபிமானிகள் பலரும் தம்மிருதயத்தில் அமைத்து இன்புறவேண்டியதுமாம். இப்பொதினாச் செடியின் இலை மிக்க உபயோகமுள்ளதெனப் பல்லோராலுங் கருதப்படுகின்றது. ஐரோப்பியர் மகமதியர் முதலாயினோர் இவ்விலையின் உபயோகத்தினைப் பெரிதும் போற்றிக் கொண்டாடி, இவ்விலையைத் தினந்தோறும் தம்முணவுகளிற் றக்கபடி பக்குவஞ் செய்து கலந்துபயோகிப்பதனால் தேகாரோக்கியமுடையவராயும் மனச்சந்துஷ்டியுடையவராயு மிருப்பதாகவும் தெரியவருகிறது. இப்போது இதன் பயன்றரும் வல்லமையினையும் பரிசோதித்தறிந்த இந்துக்களில் பல்லோரும், இதனைத் தம்முணவுடன் உட்கொள்ளுவாராகின்றனர். இச்செடிகள் எக்காலத்திலும் எங்கும் தண்ணீர் மிகுதியாயுள்ள விடத்தும், தக்க பாதுகாப்பு முதலிய பொருந்தியவிடத்தும், பெரிதும் செழித்துக் கொழுத்துத் தளிர்த்து வருவதாகத்தெரிகிறது.

செடியின் உற்பத்தி:—இச்செடி உற்பத்தியாகும் விதத்தைப்பற்றிப் பல்லோர் பலவாறு சொல்லிக்கொள்ளுவாராகின்றனர். சில்லோர் இச்செடிகளுக்கு விதைகள் இல்லையெனவே சாதிப்பாராகின்றனர், சில்லோர் இச்செடிகளுக்கு விதைகள் உள்ளனவென்றும், அவைகள் செடிகளுற்பத்தியாக்க விதைக்கப்படுவனவில்லையெனவும் அப்படி அவ்விதைகள் பூமியின்மீது விதைக்கப்படினும், செடிகள் அவ்விதைகளினின்றும் முளைத்துக் கிளம்புவதில்லை யெனவும் கூறுவாராகின்றனர். சிலர் அவ்விதைகளினின்றும் செடிகள் கிளம்புகின்றனவென்றும், எப்போது செடி என்னும் பெயர்கொண்டு பூமியில் உற்பத்தியாயதோ அப்பொழுதே அச்செடிக்குப் புஷ்பமும் விதைகளும் உண்டென்று சாதிப்பினும், அவர்கள் அவ்விதைகளைத் தாம் பூமியிலிட்டுப் பார்த்த அநுபோகத்தினைப்பற்றிக் கூறுதொழிகின்றனர். ஆனால் ஒரு சாரார் செடி, விதை விதைத்துப் பூமியினின்று கிளம்பிச் செடியாகும் விதத்தினைத் தவிர்த்து வேறு விதமாயுணைப்பாராகின்றனர்.

1. சரகுநார்க்கயிற்றிலேனும், உலர்ந்த வைக்கோற் கயிற்றிலேனும் வெல்லத்தைக் கரைத்து நன்றாகக் கயிறுமுழுவதும் தடவி, சுவரிலோ மற்

றெவ்விடத்திலோ, வஸ்திரமுலர்த்துவதற்கு கட்டுங் கொடிபோன்று கட்டி வைத்தால், வெல்லத்தின் இனிப்புக்காக பல ஈக்கள் அக்கயிற்றிலுள்ள வெல்லப்பாகை உறிஞ்சுமாறு அக்கொடியில் மொய்ப்பனவாகின்றன. அவ்வாறு மொய்த்த சில நாட்கள் சென்ற பின் நல்ல பழைய எரு அல்லது உரங்கலந்து, பக்குவப்படுத்தப்பட்ட புழுதியுள்ள நிலத்தில் ஈக்கள் மொய்த்துள்ள அத்தகைய கயிற்றினைக் கொண்டுவந்து பரப்பி மேலே மண்ணினால் மூடிச் சின்னாட்கள் வரையில் தண்ணீர் தெளித்துவரப் பொதினாச் செடியின் முளைகள் மனமகிழுமாறு கிளம்புவனவாகின்றன.

2 பதரில்லாமல் வைக்கோலை ஆராய்ந்தெடுத்து, அதில் ஒரு பன்னை (ஒரு சிறு வைக்கோற்கற்றை) எடுத்து வட்டம்போற் செய்துகொண்டு அக்கற்றையில் அரிசியிலிருந்து வடித்த கஞ்சியை காலைதொட்டு இரண்டு நாழிகைக்கொருதரம் அப்பன்னை வைக்கோலின்மேல் நாள் முழுவதுமாவது அல்லது அந்நாளில் நான்கு அல்லது ஐந்து தடவைகளாவது தெளித்துக் கொண்டிருக்க, இயல்பிலேயே மொய்க்குங் குணமுள்ள ஈக்கள் அப்பன்னை வைக்கோலின் மீது மொய்த்த பின்னர் அப்பன்னை வைக்கோலின் ஈக்களால் இடப்பட்ட எச்சத்துடன் அவ்வைக்கோற் கற்றையை இரண்டுமூன்று நாட்கள் முன்னரே அதற்கென்றே தோண்டப்பட்டுள்ள பழைய எருக்கலந்த ஒரு அடி ஆழமுள்ள பள்ளத்தில் அன்று சாயந்திரம் வைத்து மூடி மேலே இரண்டு மூன்று தரம் ஜலந்தெளிக்க இருபத்தொரு நாட்களில் பொதினாச் செடியின் முளைகள் கிளம்புவனவாகச் சொல்லப்படுகின்றன. அத்தகைய செடிகள் ஒன்றரை அடி உயரம் வளர்வனவாகவுஞ் சொல்லப்படுகின்றன.

3. புதுவையிலுள்ள செயிண்டுலேன் என்னும் மறுபெயர் வாய்ந்த இராஜா தோட்டத்தின் மேலதிகாரியினிடத்து நாம் சம்பாஷித்ததில் இப்பொதினாச் செடியின் மூலோற்பத்தி ஈ என்னும் சிறு பறவையின் எச்சத்தினாலுண்டாவதென்றும் வெல்லக்கட்டி வந்ததோர் சாக்கைச் சுமார் ஆறு மாத காலவளவு. அதன்மேல் சிறிதேனுங் கவனம் வைக்காது ஒரு மூலையிற் போட்டுவைக்க ஆறாவதுமாத விறுதியில் அச்சாக்கு அம்மூலையிற் போட்டு மண்சுவரூபமான தூள்களாக மாறுவதாகின்றதாகவும், பின்னர் தக்க எருவுடன் கலந்த ஒரு சதுரமண்ணில் அத்தூள்களைத் தூவி மூடி மண்ணைக்கிளறிக் கலக்கி மூன்றுநாட்கள் வரை தண்ணீர் தெளித்துவர மூன்றாவது நாட் காலையில் பொதினாச் செடியின் முளைகள் அந்நிலச சதுரப்பரப்பில் தோன்றுவதாகின்றனவெனவும் இது தாம் அனுபவத்திற் கண்டறிந்ததென்றும் சந்தேகமறக் கூறுகின்றார்.

இஃதிப்படியிருக்கச் சிலர் இப்பொதினாச்செடியின் மூலகாரணம் வெளவால் புழுக்கை யென்று கூறுவாராகின்றனர். இது விஷயம் எதுவரையில் உண்மையோ சொல்லுதலரிது.

இப்பொதினாச்செடி சில அங்குலவளவு பூமியின் மட்டத்திலிருந்து உயர்ந்த பிறகு இன்னும் செடிகள் உற்பத்தி செய்யவேண்டி அச்செடிகளைக் கிள்ளிக்கிள்ளி நடுவதனால் அவைகள் நொச்சி, சீமைப்பொன்னாங்காணி முதலிய செடிகள் போன்று வேரூன்றித் தளிர்க்கின்றன. இச்செடிகள் பூத்துக் காய்ப்பதுண்டு, விதைகளை யெடுத்து விதைத்தலினால், இவ்விதமாயும் செடிகள் முளைப்பதாகக் கூறுகின்றனர். இப்பொதினாச்செடியின் மற்றுமுள்ள அதிசயமான விதமாய் உற்பத்தியாகும் விதங்களை நன்குணர்ந்த நம் பத்திரிகை நேயர்கள் பலரும், அச்செடியின்மீது தாம் வைத்திருக்கும் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பரேல் யாம் அவர்பால் வந்தனமுள்ளவராவோம்.

மணம்:—இப்பொதினாவிலை முகர்தற்கு இனிமையான வாசனையையே வீசுவதாகின்றது, சிலர் அவ்வாசனையை விரும்புவாராகின்றனர். சிலர் அவ்வாசனையை வெறுப்பாராகின்றனர்.

உபயோகம்:—இப்பொதினா இலையைப்பெரிதும் போற்றிக்கொண்டாடுவோர் மகமதிய வமிசத்தினரே. தினந்தோறும் அவர்கள் இப்பொதினா இலையைத் தம்முணவுடன் பக்குவஞ்செய்து உட்கொள்ளுவாராகின்றனர் மகம்மதியர் சிச்சிலிச்சோறு என்னும் பெருத்தீவுண்டியைப் பாகஞ் செய்யுங்காலை இப்பொதினா இலையை அதிற்பெரிதும் உபயோகிப்பாராகின்றனர். ஐரோப்பியர், மகமதியருக்கு இரண்டாவதர்க இப்பொதினா இலையைத்தம் முணவுடன் கலந்துட்கொள்ளுவாராகின்றனர். மூன்றாவதாக இந்துக்களும் மற்றையோரும் இவ்விலையைப் பலமாதிரியாகப் பக்குவஞ்செய்து உபயோகிப்பாராகின்றனர்.

இப்பொதினாஇலையைச் சாப்பிடுவதனால் மனிதர் அடையும் நன்மை அநந்தம். இப்பொதினாஇலை தேகாரோக்கியத்திற்கு இன்றியமையாததாயிருக்கின்றது. வைத்திய முறையில் இத்தகைய இலை வெகுவாகப் போற்றப்படுகின்றது. வாயரோசிகம், காய்ச்சல், பித்த அரோசிகம், முதலியவைகளுக்குப் பொதினா இலை சிறந்ததோர் ஔடதமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. பொதினா இலையை உபயோகிப்பதினால் இரத்த விருத்தியும் பித்த சாந்தியும் ஜீரண சக்தியும், புத்தி விலாசமும் இவை போல்வன பிறவும் உண்டாவதாகப் பெரிதும் மதிக்கப்படுகின்றது. ஆகவே ஐரோப்பியர் இவ்விலையை மிகுதியும் போற்றி உபயோகப்படுத்துவாராகின்றனர். சுலபத்தில் ஜீரணமாகாத தன்மை பொருந்திய மாமிசாதிகளை மேற்கூறியவ உபயோகப்படுத்துகையில் இவ்விலையின் உபயோகம் அவர்களுக்குப் பெரிதும் வேண்டுவதாகின்றது;

இந்துக்கள் இவ்விலையை நெய்யில் வதக்கிச் சிறிது புளி, இஞ்சி, மிளகாய் உப்பு, கருவேப்பிலை, முதலியன சேர்த்து அரைத்துத் துகைத்துத் துவையலாக்கிப் பித்த சாந்தத்திற்காகவும் ஜீரணசக்தி யுண்டாவதற்காகவும் சிற்சிலவேளைகளில் உணவுடன் கலந்துட்கொள்ளுவாராகின்றனர்.

வைத்தியர்கள் இப்பொசினா இலையை இடித்துப் பிழிந்து வைத்திய முறைக்கேற்ற சில மருந்துக்கடைச் சரக்குகளை உடன் சேர்த்து ஒரு விதமான கிருதம் (நெய்) காய்ச்சுகிறார்கள். இந்நெய் வியாதியஸ்தர்களுக்கு மிகுதியும் உபயோகப்படுவதாகின்றது. இதனால் அவர்கள் தேகாரோக்கியமுடையவராயும் மனச்சந்துஷ்டி யுடையவராயும் திடகாத்திரராயும் ஆகிறார்கள். இத்தகைய கிருதத்தை வைத்தியர் தேகத்தின் உஷ்ணத்திற்கும் ஜவரத்திற்குங் கொடுத்து வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவாராகின்றனர்

ஐரோப்பியரும் இத்தகைய அருமையான இலையின் மகத்துவங்களை நன்குணர்ந்தவராகி இவ்விலையினின்றும் சாறு எடுத்து பெப்பர் மெண்டு (Pepper mint) என்னும் மிட்டாய் வகைகளாகச் செய்வித்து உலகினர்க்குப் பயன்படச் செய்திருப்பதை நாம் இன்றுங் காண்கிறோம். ஆனால் இவ்விலையைப் பிழிந்து சாறுக்கும் ஐரோப்பியர் பெப்பர் மெண்டு மிக்ஸ்ச்சர் (Peppermint Mixture) என்று ஜலரூபமாகப் பலவிதமான வைத்தியச் சரக்குகளை உடன் சேர்த்துச் செய்து, பித்த சாந்திக்கும் இன்னும் பலதவி வியாதிகளுக்கும் உபயோகிக்க வைத்தியசாலையில் (Hospital) ஏற்பாடு செய்திருக்கின்றனர். இத்தகைய அரிய செடியின் மகத்துவத்தைப் பற்றி பத்திரிகாபிமானிகள் பலரும் தத்தம் கவனத்தைச் செலுத்தி தமது அபிப்பிராயங்களையும் இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடுவாரென்று நம்புகின்றேம்.

ஸ்ரீவாணீவிலாஸிநி.

வாசனைப்புல் எண்ணெய்.

வாசனைப் புல்லிலிருந்து எண்ணெய்எடுக்கும் சிறந்த கைத்தொழில் இந்தியாவின் மேற்குக்கரையிலுள்ள சொச்சியிலும், அதற்குத்தெற்குப்பாகங்களிலும் வெகு விசேஷமாய்க் கையாளப்படுகிறதென்பது யாவருமுணர்ந்த விஷயமேயாம். இப்படி எண்ணெய்எடுப்பதினின்றும்வரும் வருமானம் இலாபம் முழுதும் கொச்சி திருவாங்கூர் நாட்டுச்சுதேசிகளுக்கே சொந்தமாயிருந்தது. இவ்விரண்டு சுதேசநாடுகளிலுள்ள மலைக்காடுகளில் பயிராகிவருகிற புல்லிலிருந்துதான் வெகுகாலமாக எண்ணெய் இறக்கப்பட்டிருந்தது. ஐரோப்பாவில் இவ்வாசனைப்புல் எண்ணெய்க்கு ஏற்பட்ட மிகுதியானகிராக்கியால் இந்நாடுகளில் விளைந்த ஏராளமான புல்லும் செலவாகிக்கொண்டே

வந்தது. பிறகு கொச்சிநாட்டிலுள்ள எண்ணெய் இறக்குவோர் பிரிட்டிஷ் மலையாளத்திலுள்ள புல்லைக்கையாள ஆரம்பித்தார்கள். அங்கு அவ்வேலை செய்யச்சுமார் எட்டு அல்லது ஒன்பது வருடங்களுக்கு முன்னமேதான் ஆரம்பித்தார்களென்று சொல்லலாம். அம்மலையாள நாட்டில் அப்போது அவ்வாசனைப்புல் தொத்துவியாதிக்குக்காரணமென்று வெகுவாக அந்நாட்டவர்களால் மதிக்கப்பட்டபடியால், அவர்கள் அப்புல்லினைக்காப்பாற்றிப் பாதுகாக்காமல் அவற்றைச் சமூலமாக வேரறுப்பதே தக்கதென மதித்திருந்தார்கள். ஆனால் கொச்சி ஜனங்கள் அந்நாட்டில் அப்புல்லுக்காக வந்தமாத்திரத்தில்தான் அப்புல் விசேஷமான மதிப்புடையதென்றும், அதனால் அதிக லாபமிருக்கலாமென்றும் அம்மலையாள நாட்டினர் மதித்தார்கள். அக்காலத்தில் இப்புல் பந்தல்கள்போடுவதற்கும், தீவட்டிகளுக்கும்உபயோகப்பட்டு வந்தது. இதினால் பொருள் வருமானமுண்டு என்றுஉணர்ந்து அந்நாட்டினர்; இப்போது 350 ரூபாய் விலைக்குப்போகும்படியான அதே அளவுள்ள புல்லை அக்காலத்தில் 25 ரூபாவுக்கு கொடுத்துவந்தார்கள். இப்புல்லின் விலைமதிப்பை இந்நாட்டவர் அறியாமையை உணர்ந்துவேற்று நாட்டிலிருந்து இப்புல்லைக்கொண்டு வியாபாரஞ்செய்ய அநேக வியாபாரிகள் இந்நாட்டில் தோன்றினார்கள். இப்படி முற்போந்த வியாபாரிகளில் மிகவும் முக்கியமானவர் நீலகிரித் தோட்டக்காரரில் ஒருவராகிய மிஸ்டர் பார்டன் ரைட் (Mr. Barton Wright, a Nilgiri planter) என்பவராவார். அவர் இப்புல்லினால் திரவியம் சம்பாதிக்கலாமென்றுணர்ந்து முதல் முதல் வள்ளுவநாடு தாலூக்காவில் இப்புல்லிலிருந்து எண்ணெயை இறக்க ஆரம்பித்தார். இப்புல்லின்விஷயம் இங்ஙனம் எங்கும்பரவவே, புதுப்பேட்டையிலுள்ள வெஞ்சிரிக்கும், வயநாட்டிலுள்ள அடியிலெட் (Adelaide estate) எஸ்டேட்டுக்கும் சொந்தக்காரரான மிஸ்டர் ரிச்சால்மன் (Mr. Richalmann) என்னும் மற்றோர் ஐரோப்பியத் தோட்டக்காரரும் இரண்டாவதாக இக்கைத்தொழிலைச் செய்யவந்தார். அவர் வந்தவுடன் இக்காட்டுப் புல்லின் க்ஷீணதசையைக்கண்டதும், இவ்விலையுயர்ந்த புல்லைப்பயிராக்குமாறுவழிதேடினார். இவர் வள்ளுவநாட்டுக்குப்போனார். அத்தாலூகாவிற்குத்தலைமைஸ்தானமா[கிய] பெரிண்டால்மன்னா (Perintalmanna) வுக்கு நான்குமைல்தூரத்தில் கிழக்கேயிருக்கிற அம்மணிக்காடு (Amminicad) என்னுமிடத்திலிருக்கிற 400 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காட்டுநிலத்தைக் குத்தகைக்கு வாங்கிக்கொண்டார். இந்நிலத்தை வாசனைப்புல் பயிரிடுவதற்காகவா வாங்குகிறார் என்று அந்நாட்டவர் கைகொட்டிச் சிரித்தும் ,ஆச்சரியப்பட்டுமிருந்தார்கள். இந்த் துரை பைத்திக்காரதுரைதான அல்லாக்கால் இவ்வாறான உபயோகமற்ற காரியஞ்செய்வாரா என்று எண்ணவும் எண்ணினார்கள். ஆனால் மிஸ்டர் ரிச்சால்மனோ இச்சனங்கள் பரிகாச வார்த்தைகளுக்கும் மற்றவைகளுக்கும் சிறிதேனும் காதுகொடுத்தாரிலர்.

இக்கைத்தொழில் புதிதானபடியால், இதைக்குறித்த எவ்விஷயமும்; நன்கு ஒருமுறை பரீக்ஷிக்கப்படவேண்டுமல்லவா? சாதாரணமாய் இப்பயிரை விருத்தியாக்கும் முறையைப் பற்றியேவெகுவாகச் சிந்தித்துத் தெளியவேண்டுவதாயிற்று. இப்புல்லை விதைகளிட்டும், செடிகளிலிருந்து தறித்த துண்டுக்கழிகளை நட்டும் விருத்தியாக்கலாமென்றும்மிஸ்டர் ரிச்சால்மன் கண்டுபிடித்தார். விதைகளால் பயிரைச்சீக்கிரத்தில் விருத்தியாக்குவது அசாத்தியமென்றுகண்ட ரிச்சால்மன் துரையவர்கள் அச்செடிகளைக் கற்றைகற்றைகளாகப் பூமியிலிருந்து தோண்டும்படி செய்வித்தார், அப்படி செய்வித்த கற்றைகளில் நடப்படும்படியான அனேககிளைகள் காணப்பட்டன, இக்கிளைகள் முக்கியமான கிளைகளிலிருந்து தனித்தனியே பிரிக்கப்பட்டு மூன்றடிதூரம் விட்டுவிட்டுப் பூமியில் வரிசை வரிசைகளாக நடப்பட்டன. முதன் முதலில் இவ்விதமான முயற்சிகள் மிகப்பயன்தருமென்று எண்ணுதற்குக் கூடாவிடினும் முன்யோசனையும், புத்திசாலித்தனமும், இத்தகையபிரயோசனம் தரத்தக்கதென்று உணர இது தக்கசாட்சியாகி நின்று நிலவுகின்றதல்லாவா? மிஸ்டர் ரிச்சல்மானின் பிரயத்தனங்கள்யாவும் சீக்கிரத்திலேயே பயன்தந்தன. முன் சொன்னவாறு, இவ்வாறு புல்லிலிருந்து எண்ணெய் இறக்குவது லாபம் தரத்தக்கதென்றுணர்ந்த நாட்டார்எவரும் நாட்டிலுள்ள எப்பாகத்திலிருந்தும் இப்புல்லைத்தருவித்து எராளமாய்ச்சேர்க்கஆரம்பித்துவிட்டார்கள். இப்படி இவர்கள் செய்யஆரம்பித்ததினால் வெகுவாகப்புல்லும்குறைந்துபோய்விட்டது, புல் குறைவினால் எண்ணெய் இறக்கப்படுவதும் குறைந்துகொண்டேவந்தது, இப்படி இவைகள் குறைவடைந்ததற்குச் சாட்சியாக 1905-ஆு ஜூன்-மீ 24உல் போர்ட் செயிண்டு ஜார்ஜ் கெஜட்டில் சென்னை இராஜதானியின் கடல் வியாபாரத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளை எழுதிய மிஸ்டர் டி. டி. மர்டாக் (Mr. D. D. Murdoch) என்பவர் 'முக்கியமான எண்ணெய்கள்' என்னும் தலைப்பின்கீழ் வாசனைப்புல் எண்ணெய் என்பதைப்பற்றிய எற்றுமதிக் கணக்கையும் பின்வருமாறு குறிப்பிக்கிறார்.

வருஷம்.	காலன்கள்.	ரூபாய்கள்.
1902—3	5649	2,28,701
1903—4	3745	1.53,914
1904—5	2623	1,36396

இவ்வாறு எண்ணெய் எற்றுமதி குறைவுபட்டது விசனிக்கத்தக்கதேயென்றும், ஐரோப்பாவில் இதன் கிராக்கி மிகுதியுமிருப்பதினால்தான் குறைவுக்குக் காரணமாகுமென்றும் அவர் பின்னும் எழுதுகிறார்.

மிஸ்டர் ரிச்சல்மான் காட்டிய வழியை நாட்டவர் மிகுதியும் அநுசரித்து நடப்பாராயினர். வள்ளுவ நாட்டுத் தாலூக்காவிலுள்ள சாத்தலூர் ஆம்ஷம் (Chotdalloae Amshom) என்னுமிடத்தில் இக்கைத் தொழி

வேலை வெகு மும்முரத்திலிருக்கிறது. இத்தாலூகாவிலுள்ள வெகுவாகப் புன்செய் நிலங்களில் வெகுகாலமாக எள்ளு, இஞ்சி, மலை நெல்லாகிய மோடன் என்னும் தானியங்களே பயிரிடப்பட்டுவந்தன. இப்பொழுதோ அவ்விதமான பயிர் செய்வதைக்காட்டிலும் இவ்வாசனைப்புல் பயிர்செய்வதே வெகு இலாபம் தரத்தக்கதாகக்கருதப்பட்டு அவ்வாறு செய்யப்படுகிறது. இப்பொழுதும் இப்புல்பயிர் செய்யுந்தொழில் அவ்விடத்தில் அதிக மும்முரத்திலிருந்து வருகிறது. ஆகையினால் இவ்வருஷமுதல் அப்புல் அங்கு விசேஷமாய் அகப்படும் போலும். அதனால் முன் வருஷத்தைப்போல அவ்விதமான எண்ணெய் ஏற்றுமதி குறைவு உண்டாகாமலிருக்குமென்றே சொல்லும்படியாயிருக்கிறது. காட்டுப்புல் இங்கு கிடைக்கவில்லை என்று கருதக் கூடாதவளவு காட்டுப்புல் விசேஷமாய் இங்கு அகப்படுகிறதென்றும் எண்ணக் கூடுமானதாகவே யிருக்கின்றது. ஏனெனில் மிஸ்டர் பார்டன் ரைட் என்பவர் இப்புல்லிலிருந்து இன்றைக்கும் என்றைக்கும் விசேஷமான எண்ணெயை இறக்கி ஏற்றுமதி செய்துக்கொண்டேயிருக்கிறார். தமக்கு ஓர் ஏக்கராவது சொந்தமாகப் புல்பயிர்ப்பண்ணை இல்லாமற்போனபோதிலும், தனக்கு 12 பெரிய பித்தளைப்பாத்திரங்களும் ஒரு கன்னானும் வள்ளுவநாட்டில் தேவை யென்று தெரிவித்திருக்கிறார். எண்ணெயின் விலை யேற்றக் குறைவுகள் அவ்வெண்ணெயின் நிறத்திலும் வாஸனையிலுமுள்ளது. காட்டுப் புல்கள் அறுக்கப்படுகையில் அவற்றினுடன் சில உபயோகமற்ற கிளைகளும் சேர்த்தறுக்கப்படுகின்றன. ஆனால் பண்ணைகளில் பயிரிடப்பட்ட அதே வாசனைப் புல்லினுடன் எவ்விதமான அருவருக்கத்தக்க புற்பூண்டுகளும் சேருவதில்லை. ஆதலின் காட்டுப்புல் எண்ணெயைக் காட்டிலும் அதற்கென்றே பயிரிடப்பட்டிருக்கிற புல்லின் எண்ணெய் சிரேஷ்டமானதென்று நினைக்கப்படுகிறது.

மூன்றடி குறுக்களவுகொண்ட 5½ அடி அல்லது 6 அடி உயரமுள்ள பித்தளைப்பாத்திரங்களில் இவ்வெண்ணெய் வடிக்கப்படுகின்றது. பாத்திரத்தின் மேல்பாகத்தின் பாதியில் ஒரு தொளை உண்டாக்கப்பட்டிருக்கிறது. அந்தப்பாத்திரத்தின் பாதிபாகம் தண்ணீரால் நிரப்பப்பட்டு தேவையான. வாஸனைப்புற்களை பாத்திரத்தின் பக்கத்திலுள்ள சந்துகள் வழியாய் பாத்திரத்தினுள்ளே நிரப்பி ஓட்டையை மூடிவிடுகிறார்கள். இப்பாத்திரம் நன்றாகக் கொழுந்து விட்டெரிகிற நெருப்புள்ள ஓர் அடுப்பின் மீது வைத்துக் காய்ச்சப்படுகிறது. தண்ணீர் கொதிக்கையில் புல்லிலிருந்து எண்ணெய் வெளிப்படுகிறது. இவ்வெண்ணெய் ஒரு பித்தளைச்சுருள் குழாயின் வழியாய் மற்றொரு பாத்திரத்தில் கொண்டு செலுத்தப்பட்டு பின்னர்ப் புட்டிகளில் சேர்க்கப்படுகிறது. வெகு விசேஷமான எண்ணெய் எண்ணெய் வடிகட்டும் தாளினால் வடிக்கப்பட்டு புட்டியில் சேர்க்கப்படுகிறது. இப்படி ஒரு

முறை செய்தல் 10மணி நேரம் பிடிக்கிறது. அதனால் வருகிற முக்கால் பங்கு ஒரு புட்டியாகிறது. ஒரு புட்டி எண்ணெய் எடுக்க 16 துலாம் அல்லது 700 பவுண்டு புல் தேவையாகும். தற்காலத்தில் ஒரு முறை ஒரு கொத்துப் புல்லை வெட்டினால் ஒரு துலாம் புல் ஆகும். ஒரு முறை எண்ணெய் வடிகட்ட எட்டணாவிற்குக் கட்டையும், நான்கு கூலியாட்களும் தேவையாயிருக்கின்றன. இம்மனிதர், தலைக்கு 6 அணா வீதம் கூலிபெற்று இரவு பகலாய் உழைக்கவேண்டியவரேயாகின்றனர். ஒரு புட்டி எண்ணெய் $25\frac{1}{4}$ ஔன்ஸ் அளவுள்ளது. ஒரு டஜன் அல்லது 12 புட்டிகளின் விலை காலிகட்டில் தற்காலவிலையின்படி ரூ 105 அல்லது 106 ஆகவிருக்கிறது. ஆகவே ஒரு புட்டி எண்ணெயின் விலை ஏறக்குறைய ரூபா $8\frac{3}{4}$ ஆகிறது.

அடியில் காட்டியிருக்கும் கணக்கு விவரத்தால் இதன் லாபம் இவ்வளவென்பதை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

டஜன் புட்டிகள் 105 ரூபாயாக ஒரு புட்டியின் விலை	ரூ 8—12—0
1 துலாம்புல் 3 அணாவீதம் ஒருபுட்டிக்காக 20 துலாம்புல் விலை	ரூ 3—12—0
தேவையான விறகு விலை	ரூ 0—10—0
கூலிகள் செலவு	ரூ 0—10—0
மொத்த சிலவு	ரூ 5—0—0
இலாபம்	ரூ 3—12—0

16 துலாம் புல்விலிருந்து $\frac{3}{4}$ புட்டி எண்ணெயே இறக்கப்படுமாதலின் ஒரு புட்டிக்கு 20 துலாம் புல் தேவையாகக் கணக்குக்கொடுத்திருக்கிறது. மேற்காட்டிய லாபத்திலிருந்துதான் மேற்பார்வை பார்ப்பவர் சம்பளம் முதல் பணத்திற்கு வட்டி, முதலான சில்லறைச் செலவுகளை யெடுத்துக் கொள்ளவேண்டும். அப்படி எடுத்துக்கொண்டாலும் இக்கைத்தொழிலினால் அதிக இலாபம் இருக்கிறதென்றே மதிக்கப்படுகிறது. ஒவ்வொரு எண்ணெய் இறக்கும் பாத்திரமும் ரூ 300 முதல் 350 வரையில் விலைபெறுகிறது. மலையாளத்தில் எண்ணிறந்த கன்னார்கள் இருந்தபோதிலும் உயர்ந்த எண்ணெய்ப் பாத்திரங்கள் பெரின்டால் மன்னாலில் தான் செயப்படுகிறது. சீக்கிரத்தில் எண்ணெய் சேருவதற்காக எண்ணெய்க்குழாய் எப்போதும் குளிர்ந்த ஜலத்தில் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆதலின் இக்குழாய் வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்திலுள்ள நீர் குளிர்ந்திருக்கிறதாவென்பதை அடிக்கடி கூலிவேலை செய்வோர் அதிக கவனம் செலுத்திப்பார்த்து வருதல் இன்றியமையாதது. ஆதலின் இப்பாத்திரங்கள் ஜலம் ஓடிக்கொண்டிருக்கும் இடங்களில் ஸ்தாபிக்கப்படுவது அத்தியாவசியமானதேயாம். மெஸர்ஸ் வால்காட் பிரதர்ஸ் கம்பேனியார் தாம் அவ்வெண்ணெயை அதிகமாகக் கப்பலில் ஏற்றுமதி செய்விக்கிறார்கள். இதுவரையில் சுதேசநாடுகளில் விசேஷமான முதல்தரமான எண்ணெய்கள் செய்யப்பட்டு, கொச்சியிலிருந்துதான் முக்கியமாய் ஹாம்பர்க், லண்டன் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது. இப்போது கொச்சி மும்முரங்களெல்லாம் குறைந்தனவாகவும், காலிக்கட்டுதான் இவ்வெண்ணெய் ஏற்றுமதியில் இனிமேல் முதன்மையாய் நிற்குமென்றும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீவாணீவிலாஸிநீ.

சிந்தாமணி சரித்திரம்.

4-வது அத்தியாயம்.

(55-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிந்தாமணியின் பரிதாபமான நிலைமை இவ்வாறு இருக்க கிருஷ்ணையரும் மகாதேவையரும் ஏறிவந்தபடகு நேராகச்செல்லாமல் ஜமீன்தார் மோசமாக உரைத்த வார்த்தைக்கு இணங்கி அப்படகுகாரன் இடைவழியில் அலைமிகுதியாக அடிக்கிறதென்றும் படகை நடத்த முடியவில்லையென்றும் சொல்லி ஒரு மணி நேரம் பாசாங்கு செய்துவிட்டுப் பிறகு படகை ஜனார்த்தனத்தில் கொணர்ந்து இறக்கினான். அப்பொழுது நடு இரவு ஆகிவிட்டபடியால் அங்கு அவ்விருவர்களும் தங்கியிருந்து மறுநாள் காலையில் திருவனந்தபுரம்போய்ச் சேர்ந்தார்கள். அவ்விருவர்களுடைய மனக்கவலை இவ்வளவென்று அளவிட முடியாது. கிருஷ்ணையர் மகாதேவரைநோக்கி:—

“நண்ப! நாமொன்றுநினைக்கத் தெய்வமொன்று நினைக்கலாயிற்றே. சாதாரணமாக இப்படி நேர்ந்ததென்று எனக்குத் தோன்றவில்லை. சிந்தாமணியின் க்ஷேமத்தைப்பற்றி எனக்குப்பலவாறு சந்தேகமுண்டாகிறது. அந்த ஜமீன்தார் எந்தக் கொடியசெயலுக்கும் பின் வாங்காத சுபாவமுடையவனென்று அவன் பார்வையினால் வெளியாயிற்று. ஐயோ! என்ன கஷ்டம். அவள் திருவனந்தபுரம் போய்ச்சேர்ந்தாளோ அல்லது இடைவழியில் அந்தப்பாதகனுடைய மோசமான வலையிற்சிக்கிப் பரிதபிக்கின்றாளோ? மகா உத்தமகுணமுடையவளாயிற்றே. மகாசூரர்கள்போல நாமிருவரும் துணையாக வருகின்றோமென்கிற உறுதியின்பேரிலல்லவா அவள் புறப்பட்டாள். அவளுடன் கூடச்சென்ற அழகி ஒன்றுந் தெரியாத பேதையல்லவா? நாம் நமது பாட்டைப் பார்த்துக்கொண்டிராமல் உதவிபுரிவதாகச் சொல்லி அந்தக்குணவதியைப் புறப்படும்படி செய்து இடையில் கைவிட்டிருக்கின்றோமே சிவ! சிவ! என்னபாவத்துக்குள்ளாகினோம், ஈசுவரன் கருணாநிதியென்பது பழையகாலத்தின் வசனம்போலிருக்கின்றது என்றுரைத்தான். அதைக்கேட்ட மகாதேவையர் கிருஷ்ணை;

மிகுந்தமோசமோ நடந்திருக்கிறதென்று நம்புகிறேன். இங்கு நாம் விசனப்பட்டுக்கொண்டிருப்பதிற்பயனில்லை. தெய்வானுகூலத்தினல் ஒருக்கால் அவள் திருவனந்தபுரத்துக்கே வந்து அவளுடைய புத்தி வலிமையினல் அவள் புருஷனுடைய விடுதியை விசாரித்துத் தெரிந்துகொண்டு அங்கேபோய்ச் சேர்ந்திருக்கக்கூடாதா? நாம் நமது முயற்சியை விடாமல் செய்யத்தக்க வேலையைச் செய்வோம்" என்று கிருஷ்ணையருக்கு ஆறுதலான மொழிகளை உரைத்து அவருடன் சாலைத்தெருவில் நடராஜ செட்டியாருடைய விடுதியைப்போய்ப் பார்த்தார்கள். அது கதவடைத்துப் பூட்டிக்கிடந்தது எதிர்த்தவீட்டிலுள்ளவர்களை விசாரித்ததில் நடராஜசெட்டியார் அவர் நேசித்திருக்கும் அச்சிமங்கைகளுடன் பாண்டிநாட்டில்—————நகரில் நடக்கும் தேவாலய மகோத்சவத்தைப் பார்ப்பதற்காகப் போய்விட்டதாகவும் அவர் திரும்பிவருங்காலம் நிச்சயமில்லையென்றும் வெளியாயிற்று. உடனே அவ்விருவரும் அந்த ஊரில் எவ்விடத்திலாவது சிந்தாமணியைக் காணலாமென்கிற கருத்துடன் அங்குமிங்குந்தேடி அலைந்தார். அலைச்சலினலும், மனக்கவலையினலும் மிகுந்த களைப்பையடைந்து அதற்குமேல் எம்முயற்சியும் செய்வதற்கு மனவலியில்லாமல் அவ்விருவரும் ஓர் ஊட்டுப்பரையில் இறங்கி சிரமபரிகாரங்கள் பண்ணிக்கொண்டிருந்தார்கள், அக்காலையில் மகாதேவையர் கிருஷ்ணையரை நோக்கி,

"இவ்வூர் முழுமையும் அலைந்து தேடிப்பார்த்தும் அந்தப்பெண் அகப்படவில்லையே ஒருகால் நம்மை வேறுபடுத்துவதற்குத் தந்திரம் செய்திருப்பதுபோல அப்பெண்ணுக்குத் துணையாகவந்த அழகியையும் மோசஞ்செய்து பிரித்து அகற்றியிருப்பார்களென்றே சந்தேகிக்கிறேன். இன்றுபோல் என்றைக்கும் என்மனமானது சஞ்சலத்தையடையவில்லை வேண்டுமென்றே இந்த அக்கிரமங்கள்செய்யப்பட்டிருக்கின்றனவென்பது திண்ணம். அப்பாவி என்ன சூதுகள் புரிந்திடினும் சுலபமாக அக்கிரமத்தில் பிரவேசிக்க அவள் இடங்கொடுக்கமாட்டாள். அப்படியானல் அவளுயிருக்குக்கேடு சம்பவித்திருக்குமென்று நினைக்கிறேன்" என்று கவலையுடன் உரைத்தான்.

அதுகேட்ட கிருஷ்ணையர் உலகத்தில் வயிற்றுச்சோறு அகப்ப

படாமல் ஆடு, துணி முதலிய அற்ப பதார்த்தங்களைத் திருடுகிற பேதைகளைத் தண்டிக்கிறதற்காகமட்டும் கோர்ட்டுகளும், சட்டங்களும் ஏற்பட்டிருக்கின்றனவே தவிர செல்வமிகுதியால் இறுமாந்து பற்பலவிதமான கொடியகுற்றங்களைச்செய்துகொண்டு பிராணிகளுக்கு இம்சை செய்வதையே பரமானந்தமாக உட்கொண்டு அனுஷ்டித்துவரும் இப்பாவிகளுக்கு ஒரு தண்டனையும் காணேம். இந்த ஜமீன்தார்தான் என்ன? இவ்வளவு செல்வம் வாய்ந்திருந்தும் தன்னுடைய சம்பத்துக்களைக் காப்பாற்றிக்கொண்டு பிறருக்கு உதவி செய்யாமற்போனுலும் தீங்கொன்றும் செய்யாமல் இருந்துகொண்டாவது சௌக்கியமாக இருக்கக்கூடாதா? குடி விபசாரம், இரக்கமின்மை, இவையெல்லாம் ஒருங்குபடக் குடிகொள்ளும் இடமென இவர் இருக்கவேண்டுமா?

உலகத்தில் காலமெல்லாம் படித்துப் பரீக்ஷைகளில் தேற முயன்று திரவியம் சம்பாதிப்பதற்காக எத்தனைபேர் கொடும்பாடு படுகிறார்கள். வியாபாரத்தில் முயன்று நாடுவிட்டு நாடு சென்று காலாகாலத்தில் ஊணுறக்கமின்றி வருத்தப்பட்டுச் சம்பாதிக்கிறவர்கள் எத்தனைபேர்? அட! பாவிகளா! பிறக்கும்பொழுதே எம்முயற்சியுமின்றிச் சகல சம்பத்தும் பொருந்தியிருந்தும் மற்றவர்களைப் பார்த்தாவது நல்லறிவு வாய்ந்து கிரமமாக இருக்கக்கூடாதா? இவர்கள் திரவியமெல்லாம் அடப்பக்காரர்களும் போலீஸ்தார்களும் சாராயம் விற்பவர்களும் துர்மார்க்கத்துக்கு நாணமின்றி உதவிபுரியும் வஞ்சர்களும் ஆகத்தானே தின்றுதின்று அழிகிறது. இவையெல்லாம் இவர்களுக்கு வழக்கமான ஆசாரணைகள் ஆய்விட்டன. சிவ! சிவ! அந்த ஜமீன்தார் சக்கிரவர்த்திபோல அமர்ந்து மாட்சியுடன் வாழ்வதற்கு அளவிறந்த சம்பத்தும் வித்தையும் பொருந்தியிருந்தும் மூன்றேமுக்கால் நாழிகைக்குள் கோடிக்கணக்காகத் திரவியங்களைப்பாழாக்கி சாத்தியமான மட்டில் பாவங்களைப்புரிந்து பலன்களைக் கைக்கொண்டு தன் நாட்டையும் ஒரு செட்டியினிடம் ஒப்புவித்துத் தன்னைச்சேர்ந்தவர்களையும் பரதேசிகளாக்கி மிடிமையிலும் அழுந்தி வெகுசடுதியில் பரலோகம் சென்றனர். உனக்குத்தெரியாதா? அந்த ஊர் ஜமீன்தார் குடிபேதன் காரியமாய் முடிந்து ஒரு கடிகையில்விழுந்து விஸ்தாரமான தன்

சிமையையும் பாழாக்கிப் பிறகு இருந்த இடம் தெரியாமல் கண்மூடி விட்டார்.

இப்படி எத்தனையோ கொடியோர்கள் செல்வச்செருக்கினல் கணக்கிலடங்காத துர்மார்க்கங்களைச் செய்து பிறர்களைக்கெடுத்துத் தங்களையும் தங்கள் குழாங்களையும் பாழாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சாராயத்துக்கும் துப்பாக்கிமருந்துக்கும் நாய்மந்தைகளை வைத்து வளர்ப்பதற்கும் ஒன்றுக்கு ஐந்தாக துணிமணிகளுக்கும் கோர்டு விவகாரங்களுக்கும் விநியோகித்துப்பாழாக்கும்திரவியங்களைக்கொண்டு எத்தனை தர்மங்களை நடத்தலாம். எத்தனைபாடசாலைகளை ஆதரித்து ஜனங்களுடைய வித்தையை அபிவிருத்திசெய்யலாம். நமது தேசத்திற்கு அவசியமாகவேண்டியிருக்கின்ற கைத்தொழில், வியாபாரம், விவசாய அபிவிருத்தி முதலியவைகளை எவ்வளவு அழகாகச் சீர்திருத்தம்செய்லாம், ஒருபைசாக்கூட நன்மையில்செலவழியக்காணேமே. துர்மார்க்கமிகுதியால் ஆயுளையும் இழந்து சாம்பலாய்ப்போகிறார்கள். சிச்சீ! என் சிநேகிதர் ஒருவர் இருக்கிறாரே அந்தப்புத்திமான் கோர்ட்டாவ்வார்ட்ஸிலிருந்து ஜமீனை ஒப்புக்கொண்டு இன்னும் ஐந்தாறு வருஷம் ஆகவில்லை. அதற்குள் எத்தனை மகோற்சவம் கொண்டாடிவிட்டார். கொலைகேஸ் பதின்மூன்று, கொடுந்துன்பக்கேஸ்இருபது, ஸ்திரீ பலவந்தக்கேஸ் பன்னிரண்டு வெளிக்குவராமல் மறைந்துபோனகேஸ்கள் அனந்தம் இம்மட்டோ? விலைமாதர்களுக்கும் அவருக்குப்பின் நாங்களெனவரும் வைத்தியர்களுக்கும் சூறையிட்டபணம் கணக்கில் அடங்காது. இத்தனை கொள்ளையில் ஒரு குடியானவனிடத்தில் ஐந்து பைசா பாக்கியிருந்தால் அதை மனதாறவிடமாட்டார். அவன் வீடு நிலம், அவன் பெண்ஜாதியின் தாலிமுதற்கொண்டு விடாமல் ஜப்தி செய்து ஹைகோர்ட்டுவரையில் வியவகாரம் நடத்தி ரூபா ஆயிரம் செலவிட்டாவது அந்த ஐந்துபைசாவையும் வசூலிப்பர்.

அவருக்கு அமைந்த சகவாசங்களும் அத்தன்மையுடையன. கொலைக்கஞ்சாத ஒரு குயவன் மந்திரி. சமயத்துக்குத்தக்கவண்ணம் பேசி மானமற்ற எத்தொழிலிலும் பிரவேசிக்கும்படிசெய்வதற்கு எல்லாவித்தையுங்கற்ற ஐயங்கார் ஒருவர், அவருக்கு மானேஜர் அவருக்கு மிகவும் அன்புபாராட்டி அவருக்கும் குடிகளுக்கும் ஒற்றுமை

யில்லாமல் செய்துகொண்டிருக்கிற முதலிஒருவன், கணக்கன். வியவ காரங்களை நடத்துவதற்குஅவரிடத்திலிருந்து அதிகாரம் பெற்றிருக் கிறவன் ஒரு தட்டான். நூற்றுக்கு ஐம்பது டிஸ்கௌன்ட் பிடித் துக்கொண்டு வெகுசரஸமாய்க் கடன்கொடுப்பதற்கு ஒருசெட்டியும் அமர்ந்திருக்கிறான். அடப்பக்காரர்கள் நன்றாய் விலாப்புடைக்கத் தின்றுவிட்டு மதமிகுதியால் ஊர்ச்சண்டைகளை விலைக்குவாங்கிக்கொ ண்டுவந்து இவர் தலையில் போடுவதனால் இவருக்குவரும் துன்பம் எவ்வளவு? சொன்னாலும் கேட்கிறாரா? ஒரு சமயத்தில் ஒரு வித் துவான்,

> "ஞானமறைத் தேமோசப் நாடிடுவன் வேட்சோவன்
> மானமொழித் தேநடப்பன் வைணவன்காண்—கானரவக்
> குட்டிநிகர் வாழ்முதலி கூற்றினைப்போல் லான்தட்டான்
> செட்டியுமே வெந்நரகந் தீங்கு" என்று

பாடினான். அதைக்கேட்டும் அவருக்கு நன்மதியுண்டாகவில்லை என் னவோ, சனியன் இப்படிக்கெல்லாம நமது நாடு கெட்டலைகின்றது" என்று சொன்னார். அதைக்கேட்ட மகாதேவையர்,

"என்ன செய்யலாம், நல்லமார்க்கத்தில் நூயன்று மிகுந்த ஊக் கத்துடன் லோகோபகாரமான செய்கைகளை நடத்துகிறவர்கள் சிலர் களில்லையா? அவர்கள் ஒருவாறு கவனமின்றிப் பிறர்களுடைய ஸ்தோத்திரத்துக்கும் வஞ்சகம் நிறைந்த முகமன்மொழிகளுக்கும் உள்ளாகி ஒன்றுக்குப்பத்தாகத் திரவியத்தை வீண் செலவு செய்து துயரத்தையடைந்தபோதிலும் நல்வழியில்ஊக்கம், ஈசுவரனிடத்தில் பக்தி, அறமியற்றுதலில் ஆசை இவைமட்டும் குன்றாது நல்லொழுக் கத்துடன் நடக்கிறார்கள். அறியாமை எனபது செல்வத்தைவிட்ட கலாத குற்றம்போலும் காண்கிறது. இவர்கள் எப்படியிருந்தாலெ ன்ன? இப்பொழுது நாம் கைக்கொண்டிருக்கும் காரியம் மிக்கவுப காரமுள்ளதாயிருக்கிறது நாம் இன்று முழுமையும் இங்கிருந்து இவ் வூருக்கு இன்று சாயுங்காலம் படகுகள் வந்துசேரும் வரையில் காத் திருந்து பார்த்துவிட்டு அந்தப்பெண்ணும் அழகியும் அகப்படாத பக்ஷத்தில் மறுபடியும் நாம் அந்த ஜமீன்தாருடைய ஊருக்குச்சென் று அவ்விடத்தில் விசாரித்து எவ்விதம் நிகழ்ந்திருக்கிறதென்று தெ ரிந்துகொண்டு அப்பால் தக்க முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று சொன்னார்.

(இன்னும் வரும்) உமாதாஸ்.

சேலம் தமிழ்ச்சங்கத்தின் முதல் வருஷோற்சவம்.

நம் மதுரைத் தமிழ்ச்சங்கம் ஏற்பட்டபின்னர் மற்றை நகரங்களிலும் தமிழ்ப்பரிபாலன நிமித்தமாகச் சங்கங்கள் ஏற்பட்டு நடைபெற்றுவருகின்றன வென்பதைக் கேட்க நமக்கு மிக்க மனமகிழ்ச்சியுண்டாகின்றது. தஞ்சை, திருநெல்வேலி முதலிய இடங்களில் இம்மாதிரியான சங்கங்கள் ஏற்பட்டுச் சிலகாலமாக நடந்துவரச் சேலத்தில் சங்கம்ஏற்பட்டு ஒருவருஷமே ஆகின்றது. நிகழும் ஏப்பிரேல்மீ 21உ சனிக்கிழமையன்று இப்புதுச் சங்கத்தின் முதல் வருஷோற்சவம் நடந்தது. அச்சமயம் ஸ்ரீமான் பாண்டித்துரைசாமித்தேவர் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அவர்கள் மதுரைமாநகரினின்று சென்று அக்கிராசனம் வகுத்ததற்குச் சேலத்தார் மிக்க கடமைப் பட்டவராகினார்கள். ஸ்ரீதேவர் அவர்கள் சென்ற வருஷம் தஞ்சை மாநகருக்கு விஜயஞ்செய்து அச்சங்கத்தின் வருஷோற்சவ காலத்திலும் அக்கிராசனம் வகித்தனர். இதனால் தமிழ்நாட்டாருக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்கண் உள்ள மதிப்பும் அதன் அக்கிராசனாதிபதியின் தமிழ் அபிமானமும் தெளிவாகத் தெரிகின்றது. சேலத்தார் சென்ற ஒருவருஷமும் தமிழ் அபிவிருத்தி விஷயமாய்த் தக்க வண்ணம் வேலைசெய்து வந்திருக்கின்றனர் என்பது அவர்கள் வாசித்த அறிக்கைப்பத்திரத்தால் வெளியாகின்றது. இவ்வித முயற்சி உண்டாகும்வண்ணம் அவர்களுக்குள் தூண்டுதல் செய்தவர் அவ்வூர் டிஸ்திரிக்டு முனிசிபு மகா-ள-ள-ஸ்ரீ J. M. நல்லசாமிபிள்ளையவர்களே. அன்று காலை 10மணிக்கு அவ்வூர் விக்டோரியா மார்க்கெட்டில் ஏறக்குறைய 1000 ஏழைஜனங்களுக்கு உண்டி உதவப்பட்டது. 12மணிக்கு நேசர்களும் சங்கத்தைச் சேர்ந்தோரும் விருந்துண்டார்கள். 4மணிக்கு சங்கத்து அங்கத்தவர்களுக்குள் சம்பாஷணை நடந்தது. பின்னர் 6மணிக்கு சபையின்வருஷோற்சவ அறிக்கை காரியதரிசியவர்களால் படிக்கப்பெற்றது. அதன்படி சென்றவருஷத்தில் 35 கூட்டங்கள் கூடப்பெற்றதென்பதும் திருக்குறளில் இல்லற இயல்பு படித்து முடிவு

பெற்றது என்பதும், இடையின

டு,கலித்தொகை முதலிய நூல்களினின்று

அர்த்தம் செய்யப்பட்டன என்பதும், தக்க பண்டிதர்க

ங்கங்கள் நடத்தப்பெற்றன என்பதும், சிலஅரியதமிழ்ப் பிரப

ள் புத்தகசாலைக்கு வாங்கப்பட்டன என்பதும், அங்கத்தினர்கள் மா

தாமாதம் நான்கு அணு சந்தாத்தொகை செலுத்தி வருகிறார்களென்

பதும், இன்னும் இவைபோன்ற உபயோகமானவிஷயங்கள் நடந்து வ

ருகின்றன என்பதும் தெளிவாய்த்தெரியலாயின. 'சிறுகக்கட்டிப்பெ

ருகவாழ்' என்பதை இச்சங்கத்தார் கைக்கொண்டு சென்ற ஆண்டிற்

செய்து வந்ததுபோலவேவரும் ஆண்டுகளிலும் முயன்று தமிழ்ப்பிர

பந்தங்களை வாசித்தும் அறிவை அபிவிருத்தி பண்ணி வருவார்களா

னால் இச்சங்கம் தழைத்தோங்கி நம் தமிழ்நாட்டுக்குப் பலநன்மைகளை

ச்செய்ய ஏதுவாகும். அடிக்கடி கூடி நூல்களை ஆராய்ச்சி செய்தும் பி

ரசங்கங்கள் செய்தும் செய்வித்தும் வருவார்களானால் அறிவு என்ற

ஒளி பரவி அஞ்ஞானம் என்ற அந்தகாரம் ஒழிந்து நாடெங்கும் நன்

மை அடையும். சுயபாஷையை அபிவிருத்தி பண்ணுவதும் சுயமத

த்தை ஆராய்ச்சி செய்து அபிவிருத்தி பண்ணுவதுமே உண்மையான

சுவதேசியம். இதுவே நாம் நம்தாய்நாட்டுக்குச் செய்ய உடன்பட்ட

கடமையாகும், இக்கடமைகளைக் கைவிடுவோர் வேறு எவ்விதத்திற்

சிறப்புற்றிருப்பினும் சிறப்புடையவராகார். இஃது உண்மை

பத்திராதிபர்.

...ரபடங்கள்.

...ம 14-ம் தேதி 15-ம் தேதி சனிக்கிழமை பிற்பகலில் பாரிஸா ...காணக் கூட்டம் கூடிற்று. வங்காளத்தின் அநேகம் பாகங்களிலி ...து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். சுமார் 300 பிரதிநிதிகள் கூடியிருந்தார்கள். மற்றவர்களை யெல்லாம் சேர்த்தால் சுமார் எண்ணாயிரம் பேர் வரையில் கான்பெரன்ஸ் பந்தலில் கூடியிருந்தார்களென்றே சொல்லவேண்டும். ஆங்குள்ள நதிக்கரையில் மட்டும் 5000-பேர் வரை திரண்டிருந்தார்கள். பிரதிநிதிகள் பாரிஸாலைக் கண்டவுடனே "வந்தேமாதரம்" எனக்கூறி யாரவாரித்தார்கள். மற்ற ஜனங்களும் தங்கள் தலைவர்கள் கூறியதைப் பார்த்துத் தாங்களும் வந்தேமாதரம் எனக்கூறினார்கள். பாரிஸாலில் வந்தேமாதரமெனக் கூறக்கூடாதென்றும், சங்கீதம் வாசித்துக் கொண்டு கூட்டங்கள் கூடக்கூடாதென்றும் கூட்டம் கூடவேண்டுமானால் லைஸென்ஸ் வேண்டுமென்றும் ஸர். பி. புல்லர் உத்திரவிட்டிருக்கிறார். இவ்வுத்திரவு மிகவும் சட்டவிரோதமானதெனக் கல்கட்டா ஐக்கோர்ட் மிஸ்டர் பியூ என்பவரே அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார். ஆகையினாலே பிரதிநிதிகளும் மற்றவர்களு மிவ்வுத்தரவுக்குப் பயப்படாமல் வந்தேமாதரமெனக் கூறினார்கள். இப்படிச் செய்தால் போலீஸார்கள் தங்களைப் பிடிக்கவேண்டுமென்றும், பின்னர் கோர்ட்டார் எவ்விதமாக விசாரணைசெய்து தீர்ப்பளிக்கிறார்களென்பதை யறியவேண்டு மென்றும் எல்லோரும் கருதியபடியால் வந்தேமாதர மந்திரமானது செவிடு படும்படியாகவே உச்சரிக்கப்பட்டது. இம்மந்திரத்தைக் கேட்டவுடனே போலீசார்கள் கிளம்பினார்கள். ஹரி நாமத்தைக் கேட்ட இரணியன்போல் போலீஸ் வீரர்கள் கொம்புகளும், துப்பாக்கிகளும், பீரங்கிகளுமெடுத்துப்புறப்பட்டார்கள். சனிக்கிழமை பிற்பகல் 2-மணிக்குப் பிரஸிடெண்டும் பிரதி நிதிகளும் மற்றையோரும் கான்பரென்ஸ் பந்தல் நோக்கிப் புறப்பட்டார்கள். போலீஸார்கள் சூழ்ந்து நின்றார்கள். முதல்முதல் பிரஸிடெண்டினுடைய வண்டி சென்றது. அதற்குப் பின்னர்ப் பிரதிநிதிகள் வரிசையாக நடந்து சென்றார்கள். பிரதிநிதிகளிப்படி யொழுங்காகச் சென்றபோது, பக்கத்தே நின்று பார்த்துக் கொண்டிருந்த போலீஸார்கள் முக்கியமான தலைமைப் பிரதிநிதிகளெல்லாம் சென்ற பிற்பாடு பின்னர் வந்த சில இளைய பிரதிநிதிகளை யடிக்க ஆரம்பித்தார்கள். முன்னணியில் தாக்காது பின்னணியில் தாக்கிய போலீஸ் வீரர்களின் சாமர்த்தியத்தை என்னென்போம். பின்னணியில் கலகம் பலமாய் நடந்தது. ஒருவனைப் போலீஸார் பலமாய் அடித்துக் குளத்தில் தூக்கி யெ

றிந்தார்கள். இன்னொருவன் மரிக்ம
கூச்சலிட்டான். வேறொருவனை அடித்துக் கீழே
யானான். மற்றும் கூடியிருந்த ஜனங்களையும் போலீஸ் வீ
ர்கள். பக்கத்தே சந்து பொந்துகளி லிருந்த ஜனங்களும் அடி
டார்கள். பிரதிநிதிகளிற் சிலர் பலமான காயமடைந்தார்கள். பிர
களோ நிராயுதபாணிகளா யிருந்தார்கள். கையில் ஒரு சிறிய கொம்புகூட
இல்லாதிருந்தார்கள். ஒரு பெரிய போலீஸ் உத்தியோகஸ்தர் அநேகம்
பிரதிநிதிகளை யடித்தார். இப்படிக்கலகம் நடந்தபோது போலீஸ் அஸிஸ்
டெண்டு சூப்பரின்டெண்டும் போலீஸ் டிஸ்டிரிக்ட் சூப்பரின்டெண்டும் பிர
சன்னமா யிருந்தார்கள். கலகஞ்செய்யக்கூடாதெனப் பிரதிநிதிகள் கேட்
டுக்கொண்டும் கலகம் அடங்கவில்லை. உடனே முன்னணியிற் சென்ற
தலைவர்கள் திரும்பி வந்து போலீஸ்காரரை நோக்கி ஆக்ஷேபித்தார்கள்.
இது தான் சமயமென டிஸ்டிரிக்ட் போலீஸ் சூப்ரின்டெண்டானவர் மிஸ்
டர் சுரேந்திரநாத் பானர்ஜியைக் கைதியாகப் பிடித்தார். மிஸ்டர் மோடி
லால்கோஸ் முதலிய பல பிரதிநிதிகள் தங்களையும் கைதிகளாகப் பிடிக்க
வேண்டுமெனத் தெரிவித்தார்கள். ஆனால் சூப்பரின்டெண்டானவர் மிஸ்
டர் சுரேந்திரநாத் பானர்ஜியை மட்டும் பிடிக்க தமக்குத்தர வென்றும்
மற்றவர்களைப் பிடிக்க உத்தரவில்லை யென்றும் கூறினார். பின்னர் மற்றப்
பிரதிநிதிகளெல்லாம் வந்தேமாதரமெனச் செவிபட ஆர்த்துககொண்டு
கான்பெரன்ஸ் பந்தலுக்குச் சென்றார்கள்.

மாஜிஸ்டிரேட்டாகிய மிஸ்டர் எமர்ஸன் மிஸ்டர் பானர்ஜிக்கு 400
ரூபாய் அபராதம் விதித்தனர். அபராதத்தைக் கட்டிவிட்டு மிஸ்டர் பான
ர்ஜி கான்பெரன்ஸுக்கு வந்தபோது ஜனங்களும் பிரதிநிதிகளும் காட்
டிய ஆரவாரம் அளவுகடந்ததாயிருந்தது. உடனே இவரை ஒரு மேஜையி
ன்மீது நிறுத்தி எல்லோரும் இவரது பாதங்களைப் பிடித்தார்கள். வந்தே
மாதர மந்திரம் செவிபட வொலித்தது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் 11-½ மணிக்குக் கான்பெர
ன்ஸ் பழைபடியும் கூடிற்று. சுமார் 6000-பேர் வரை பிரசன்னமாயிருந்
தார்கள். பிரதிநிதிகள் அடிக்கப்பட்ட விடத்தில் ஞாபகச்சின்னமொன்ற
மைக்கவேண்டு மெனக் கான்பெரன்ஸி லுள்ளோரெல்லாம் தீர்மானித்தார்
கள். ஆண்களும் பெண்களுமாக எல்லோரும் சுதேசியப் பிரதிக்ஞை
செய்தார்கள். நாஷனல் கல்விக்கவுன்ஸிலுக்காக மைமின்ஸிங் ஜமீன்தா
ராணியாகிய ஸ்ரீமதி பிஸேஸ்வரிதேவியம்மை யவர்கள் லக்ஷம் ரூபா கொ
டுத்திருக்கிறார்கள். வேறே 7500-ரூபாயும் சேகரமாயிற்று.

ம.

...து கொண்டிருந்தபோது ஞாயிற்றுக் ...மாருக்குப் போலீஸ் ஸுப்பரின்டெண்டானவர் ...லுக்கு வந்து கான்பொரன்ஸ் கூடக்கூடாதென மாஜி ...மர்ஸனுடைய உத்தரவைப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்தார் ...க் கான்பெரன்ஸாரிணங்காது போகவே பின்னர் கான்பெரன்ஸைக் ...லைத்துவிட்டனர்.

நிகழும் ஏப்பிரல் மாதம் 14௳ தேசமெங்கும் குழப்பமுண்டாகி எல்லா ஊராரும் அநுதாபத்தந்தி யடித்திருக்கிறார்கள். அடுத்த புதன்கிழமையன்றுகாலை மிஸ்டர் சுரேந்திரநாத் பானர்ஜி கல்கட்டா வந்து சேர்ந்தார் ஏராளமான ஜனங்கள் ரெயில்வேஸ்டேஷனில் கூடி மிகவும் ஆரவாரமாக எதிர்கொண்டழைத்தார்கள். பின்னர்க் காலேஜ் ஸ்கொயரில் ஒருபெரிய கூட்டம் கூடிற்று. புஷ்பங்களும் ஆரங்களும் மிஸ்டர் பானர்ஜிக்குச் சாத்தப்பட்டன.

அடுத்த செவ்வாய்க்கிழமையன்று பாரிஸால் டிப்டி மாஜிஸ்டிரேட் முன்னர் ஆனரபில் மிஸ்டர் ஜேசௌதிரி ஆஜராகிக் காயம்பட்ட பிரதிநிதிகளின் பிராதுகளைத் தாக்கல் செய்து எதிரிகளுக்குச் சம்மன் பிறப்பிக்க வேண்டுமெனக் கேட்க இதற்கு மாஜிஸ்டிரேட் இணங்காமல் மிஸ்டர் எமர்ஸனுக்குத் தெரிவிக்க அவர் இப்பிராதுகளை யெல்லாம் தள்ளிவிட்டார்.

சுதேசி.

உ

திருக்குறள் விசேடம்.

“ஐந்தவித்தானாற்றலகல்விசும்புளார்கோமா
னிந்திரனே சாலுங்கரி.”

இதன் கருத்து:—ஐந்த வித்தானது ஆற்றல் பலவாதலின் அவற்றிற்குத் தனித்தனி பல சாட்சி வேண்டுவதில்லை இந்திரனொருவனே போதுமான சாட்சி. எ-று.

விசேடம். “துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்திறந்தாரை யெண்ணிக் கொண்டற்று” என்றமையால் துறந்தார் பெருமை யெண்ணிறந்தன வெனப் படுமாயினும் அவை யெல்லாம் “ஒன்னார்த்தெறலு முவந்தாரை யாக்கலு மெண்ணிற் றவத்தான் வரும்” என்றமையால் சாபமும் அநுக்கிரகமும் என்ற இருவகையா

ற்றலுள் அடங்கலரன் அவ்விருவகை யாற லாம் தனித்தனி யுணர்த்தலன்றி யொருங் குண கௌதமரது சாபத்தால் ஆயிரம் யோனியும் அவரது அநுக தால் ஆயிரங் கண்ணும் பெற்றவன் இந்திரனொருவனே யாதலின் இந்திரனே கரியென ஏகாரத்தாற் கூறினர். வசிட்டரது சாபத்தால் வசு முதலாய பிறரும் சாபாநுக்கிரகம் பெறினும் அச்சாபாநுக்கிரகங்கள் அவை பெற்றார்க்கு அநுபவத்தாலும் பிறர்க்குக் கேள்வியாலும் புலனாதலன்றி இந்திரனது சாபாநுக்கிரகங்கள் போலக் கட்புலனாகாமையாலும் காட்சியளவை யொன்றே கொள்வார் கேள்வியைக் கொள்ளாராகலானும் எல்லா அளவையோருங் காட்சியைக் கொள்ளாராகலானும் கேள்வியினுங் காட்சி சிறத்தல்பற்றி இந்திரனே சாலுமென்றார்.

இந்திரன் தானே தன்னைக் காணின் ஆயிரம் யோனியும் பிறரவனைக் காணின் ஆயிரங்கண்ணும் கட்புலப்படுமாகலின் அச்சாபாநுக்கிரகங்கள் காட்சியளவையா லுணரப்படுவன வாயின. சாபத்தால் தொழுநோயும் அநுக்கிரகத்தாற் பொன்மேனியும் பெற்றாரு முளராயினும் அவரெல்லாம் சில் வாழ்நாளுடையராதலும் பொன்மேனி பெற்றவழித் தொழுநோய் காணப்படாமையாலும் எழுபத்தொரு சதுர்யுகமென நீண்ட வாழ்நாளும் அநுக்கிரகம் பெற்றபின்னும் சாப மறையாமையு முடைய இந்திரனைக் கூறினார். அவ்விந்திரன் சென்ற இந்திரர்களுள் ஒருவனல்லன். இப்பொழுதும் வானுலகத்தை யாளுகின்றான் என்று சாட்சியை வலியுறுத்தற் பொருட்டு விசும்புளார் கோமான் என்றார்.

இப்பொழுதும் விசும்பையாள்கின்றானெனின் யாங்காணக்காட்டிரென்றுலகர் வினவின் இவ்வுலகத்துள் தவத்தினர்க்கன்றி யேனையோர்க்கெல்லாம் விசும்புலகுந் தேவரும் இந்திரனும் காணப்படாமை யுணர்த்தற்பொருட்டு அகல் விசும்புளாரென்றார். அகலெனற்குக் புலப்படாதகன்ற என்பது பொருள். நீத்தார் பலர் பற்றின்றி அறநெறியால் இல்லாளை மணந்து மகவின்றொரு முளராதலிற் கௌதமர் அகலிகையை மணந்து சதாநந்தரைப் பெறினும் ஐந்தவியாதா

…பாறு.

…ன றுணர்த்தற்பொருட்டு அவரதியிற்பெயர் …நாமெனனக் காரணப்பெயர் கூறினார். கொன்றன்ன …செய்தாரைப் பொறுப்பினும் இல்லாளை வெஃகினாரைப் பொ…றுத்தல் எததுணைத் தவத்தார்க்கு மரிதாகலான் அக்குணவாற்றலும் விளங்கற் பொருட்டு ஐந்தவித்தானதுதவவாற்றலெனச் சுட்டிக் கூறாது ஆற்றலெனப் பொதுப்படக் கூறினார். ஐந்தவித்தனாற்றற்ககல் விசும்பெனினுஞ் செய்யுள் சிதையாதாயினும் ஆற்றலுக்ககன்ற விசும்பெனப் பொருள் மயங்கு மாகலின் ஆற்றலகல் விசும்பென நான்கனுருவு தொகக்கூறினார்.

(இன்னும் வரும்)

சோழவந்தானூர்,

அரசஞ்சண்முகன்.

சமாசாரக்கொத்து.

திருநெல்வேலி மாகாணக்கூட்டம் அடுத்த ஜூன் மீ 20உ கூடும்.

***

உலகத்திலுள்ள பொற்சுரங்கங்களுள் மிக்க ஆழமானது ஆஸ்திரேலியாவிலுள்ள பெண்டிகோ என்னுமிடத்திலிருக்கிறது. இதின் ஆழம் ஏறக்குறைய முக்கால் மைல்.

***

டாடா இரும்புத் தொழிற்சாலைக்கு வைக்க இருக்கும் ஒன்றரைக் கோடி ரூபா முதலில் 75 லக்ஷரூபா பங்குகளை பம்பாய் வாசிகள் எடுத்துக் கொள்வதாக வாக்களித்திருக்கிறார்கள்.

***

புதுக்கோட்டை அரசருக்கு இவ்வருஷம் விவாகம் நடக்கப் போகிறதாவும் அதற்காக 1,43,683 ரூ மனோவிர்த்தி சாகீர் பண்டிலிருந்து செலவிடப்படு மென்றும் தெரியவருகிறது.

***

பைசிகல் வர்த்தகம் நாளுக்கு நாள் விருத்தியாகிக் கொண்டு வருகி… சென்ற வருஷம் 3½ மிலியன் பவுன் விலையுள்ள 6 லக்ஷம் பைஸிகில்கள் விற்கப்பட்டனவாம்.

சமாசாரக்

மிஸ்டர் ராபர்ட் காஸ்பர் என்ற இரசாயன... ...திரங்களில் சமைத்துச்சாப்பிடுவதினால் சில விய... ...மென்று அபிப்பிராயப் படுகிறார்.

***

திருநெல்வேலி ஜில்லா கோவில்பட்டி சோதனைப் பண்ணையை அதிகப்படுத்துவதற்காக 100 ஏகரா நிலம் வாங்கக் கவரன்மெண்டார் உத்தரவளித்திருக்கின்றனர்.

***

நமது தேசத்தில் 100-க்கு 10 பங்கு நிலத்தில் தான் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் 100-க்கு முப்பது பங்கு நிலத்தில் பயிரிட்டு வரலாம். தலைக்கு 3 பவுன் பருத்தி தான் நாம் பயிரிடுகிறோம். ஆனால் தலைக்கு 10 பவுன் பருத்தி தேவையாயிருக்கிறதாக ஒருவர் கூறுகிறார்.

***

மிஸ்டர் சுரேந்திரநாத் பானர்ஜி அவர்களுக்கு மிஸ்டர் எமர்ஸனால் விதிக்கப்பட்ட 400 ரூ அபராதத்தை முன்னிட்டு ஹைகோர்டு அப்பீல் செய்ததில் ஸெஷன் கோர்ட்டாரிடம் அப்பீல் செய்து விட்டுப் பின் ஹைகோர்ட்டுக்கு வரவேண்டுமென்று மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

***

விக்டோரியா மஹாராணியார்க்குச் செய்யப்பட்ட கிரீடம் உலகத்திலுள்ள கிரீடங்களிலெல்லாம் மிக லேசானது. அதன் விலை 3,00,000 பவுன். ரோமாபுரி போப்பு குருவினிடம் இரண்டு கிரீடங்களிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் 4,00,000 பவுன் பெறுமாம்,

***

பம்பாய்நகரத்தில் இளவரசரது பிரதிமையொன்று ஸ்தாபிக்கப்படப் போகிறது. அப்பிரதிமைநிறுத்தப்படும் கல்லின் ஒரு புறத்தில் ஸர். பி. எம் மோடாவின் சித்திரம் செதுக்கப்படும் என்று கேள்விப்பட்டுச் சந்தோஷம... ...டகிறோம்.

*   *   *

ஜப்பானில் செய்யப்படுகிற நெருப்புக்குச்சிகளில் 100-க்கு 60 பாகம் சீ...ல் விற்பனையாகின்றன. இப்போது வடசீனாவிலே ஏழு நெருப்புப்பெ...த தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகளுக்கு வேண்... ...களெல்லாம் சீனாவிலிருந்தே இறக்குமதியாகின்றது.

பல ...மைச்சாறு எழுதும் மையாக உபயோகப் ...ந்து பிற்பாடு சுத்த கறுப்பாய் மாறிவிடுகிறதாம். நியூ ...னும் ஊரில் இச்செடி யிருப்பதாகக் கூறுகிருர்கள். தாது ...ங்களில் இன்னும் என்ன அற்புத சிருஷ்டி இருக்கின்றதோ அறிகி ...லம்.

* * *

முத்திரை குத்தும் யந்திரம் ஒன்று இப்பொழுது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இது மணி ஒன்றுக்கு 30,000 கடிதங்களுக்கு முத்திரை போடும். ஆனல் தற்காலம் மிகவும் வேகமாக முத்திரை போடும் ஒருவன் மணி ஒன்றுக்கு 2500, முத்திரைதான் போடமுடியும். தபால் சேவகர்களுக்கு இனி வேலைசெய்ய சுலபமே.

* * *

ஹங்கேரியிலுள்ள கம்மாளன் ஒருவன் ஒருவாத்து முட்டையில் அது உடைந்து போகாது குதிரைலாடம், ஆணி, உளி, கத்தி இவைகளை அம்முட்டையில் ஆணியிட்டுப் பொருத்தி ஆஸ்திரய அரசருக்கு அனுப்பினன். அரசன் அவனுடைய வேலைத்திறமைக்கு மகிழ்ந்து பொற்பதக்கமும் 30 பவுனும் அவனுக்கு வெகுமதியாக அனுப்பினர்.

* * *

கோதாவரி ஸ்டேஷனுக்கு 70 மைல் தூரத்திலுள்ள சிதரெட்டியாடு என்னுமிடத்தில் காரீயம் ஏராளமாய்க் கிடைக்கின்றதாம். சென்னையிலிருந்து ஓர் ஐரோப்பிய வியாபாரக் கம்பெனியார் அதைச் சோதிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். இன்னும் இதைச்சேர்ந்த இடங்களிலும் ஈயம் கிடைக்கின்றதாம். இவற்றில் 100-க்கு 35 லாபமுண்டாகிறதாம்.

* * *

இங்கிலாந்து ராஜ்யத்துப் பூர்வதிக்கிலும் தக்ஷிண திக்கிலும் சமுத்திரம் நாளடைவில் பூமியைக் குடைந்து நாசமாக்கி யிருக்கிறதென்றும் அதனல் அநேக கிராமங்கள் நாசமாயின வென்றும் ஒவ்வொரு வருஷமும் 9 அடி பூமி சமுத்திரத்தில் சேருகிறதென்றும் பிரஜைகள் கவரன்மெண்டாரிடம் அறிக்கை செய்து கொண்டிருக்கின்றனராம்.

* * *

காஞ்சீபுரத்திற் கடுத்த திருப்பக்குழியில் பரம்பரையாய் வாழை... து விசேஷமாய்ப் பயிர் செய்து வருகிருர்கள். இவ்வூரில் ஒருதோ... ல் போட்ட வாழை பத்துப் பதினைந்து வருடம் ஆகியும் வாழையா... யாகவே பலன் கொடுத்துக் கொண்டு வருகிறதாகத் தெரியவருகி...

யில் ஒன்றரை அல்லது இரண்டடிக்குள் தண்ணீர் இருப்பதே இதற்குக் காரணம்.

* * *

மிஸ்டர்-சுரேந்திர நாதருக்கு விதிக்கப்பட்ட தண்டனை சரிதான் என்று மதராஸ் மெயில் பத்திரிகை கூறுகின்றது. ஊரெல்லாம் அல்லோலகல்லோலப்படும் சமயத்தில் இப்பத்திரிகை இவ்வாறு பேசுவது யுக்தமாகத் தோற்றவில்லை சிறிதும் இந்தியத் தலைவரிடத்தில் இப்பத்திரிகைக்கு அநுதாப மில்லாததால் சுதேசிகள் இப்பத்திரிகையை வாங்கல் கூடாதென்று அநேகம் ஊர்களில் இதனைக் கைநழுவ விட்டு விட்டார்கள்.

* * *

1904—1905 வருஷத்தில் அவுரிப்பயிர் 4, 76, 949 ஏகரில் பயிர் செய்யப்பட்டு 58, 880 அந்தர் நீலமருந்து மாசூல் ஆகியிருக்க 1905—06 வருஷத்தில் 3,80,663 ஏகரில் பயிர் செய்யப் பட்டு 44, 700 அந்தர் மாசூல் ஆயிருக்கிறது. மேல்நாட்டு ரசாயனத் தொழிலானது நம் நாட்டு விவசாயத் தொழிலை மடக்கி விடுகின்றது. இதனை நம் சுதேசிய விருப்பமுள்ளவர்கள் கவனிப்பார்களாக.

* * *

சித்திர சாஸ்திர விற்பத்தியில் இந்தியாவில் இணையற்ற வராகமதிக்கப்படுகிற ராஜா ரவிவர்மாவைத்தவிர வங்காளத்திலே மிஸ்டர் ஷோஷ் என்கிறவர் ஒருவர் இருக்கிறார். அவர் ரவிவர்மாவுக்குக் குறைந்தவ ரல்லராம். அவர் ஒரு பங்காளத்தார். மேல் நாடுகளைச் சுற்றிப்பார்த்திருக்கிறாராம். சித்திரந்தீட்டுவதில் அரிய பெயர் வாங்கியிருப்பது மன்றி வேதாந்த சாஸ்திரத்திலும் கைதேர்ந்தவராம்.

* * *

பாரிஸாலிலே நடந்த கொடுமைகளிலே "வந்தேமாதரம்" என்று கூறிய ஒரு சிறுவனைப் போலீஸார் பிராணபயமுண்டாகும்படி அடித்தும் அவ்விளவாலிபன் நீங்கள் என்னைக் கொன்றாலும் வந்தேமாதரம் என்று சொல்லிக்கொண்டு சாவேனென்றான். இவனுக்குத் தாய் தந்தை இட்டபெயர் சித்தரஞ்சனன். சுதேசபரிபாலினிப்பத்திராதிபர் இத்தைரியமுள்ள வாலிபனுக்குப் பிரகலாதன் எனப் பெயரிட்டிருக்கின்றனர். உபதேசம்செய்த நாரதரிஷி ஒருவரிருக்கவேண்டும்.

* * *

இலவங்கப் பட்டையானது இலங்கைத் தீவில் 25 அடி உயரம் வளரும். ஒருவித வாசனை மரத்திலிருந்து எடுத்து வருகிறார்கள். இதைப்பயிர்

செய்பவர்கள் செடிகள் 10 அடி உயரத்திற்கு மேல் வளராமல் கத்தரித்து முதிர்ந்த உடனே கிளைகளை வெட்டி முறுக்கி மேல்பட்டையை நீக்கிவிட்டு உள் பட்டை மாத்திரம் எடுத்து வெயிலில் காயப்போட்டால் சுருண்டு கொள்ளும். அதைப் பக்குவமாகக் கட்டி விற்பனை செய்வார்கள். இது மணற்பாங்கான நிலத்தில் செழிப்பாக வளரும்.

* * *

இந்த ஊரில் ஒரு இரட்டைப் பெண்குழந்தை வந்திருக்கிறது. அக்குழந்தைக்கு ஒரே இடுப்பு. இரண்டு சரீரம். இரண்டு சிரசு. கைகளும் கால்களும் முறையே நான்கு. ஒரு வாயால் சாப்பிட்டுக் கொண்டு மற்றொரு வாயால்பேசிக் கொண்டுமிருக்கிறது. தன்னிஷ்டப்படி படுக்கவும் தூங்கவும் நான்கு கால்களால் நடக்கவும் கூடியதாக இருக்கிறது. அக்குழந்தையின் தாய் தகப்பன் மார்கள் கூடவே இருக்கிறார்கள். வெகுஜனங்கள் போய் வேடிக்கை பார்ப்பதால் பெற்றோருக்குப் பெரும் சம்பாத்தியமே.

* * *

கொத்து மல்லி விசேஷமாகக் கறுப்புக் கரிசல் மண் நிலத்தில் செழிப்பாக வளரும். இதை உப்பும் பருத்திக்கொட்டையோடு கலந்து புரட்டாசி ஐப்பசி மாதங்களில் விதைத்துத் தைமாதத்தில் அறுவடை செய்து விடலாம். இதைத் தோட்ட நிலங்களில் ஆவணி புரட்டாசி மாசங்களில் விதைத்தால் வாரத்திற்கொருமுறை தண்ணீர் கட்டவேண்டும். புன்செய் நிலத்தில் விதைப்பது நல்ல லாபத்தைக் கொடா விட்டாலும் பருத்தி விதைக்கும் கூலியைக் கட்டித்தரும். இது எகருக்குப் பத்து முதல் பன்னிரண்டு ராத்தல் விதைகளை விதைத்தால் 288 இராத்தல் பலனைத்தரும்.

* * *

கரும்பு முக்கியமாய் நன்செய் பூமிகளில் சாகுபடி செய்யப் படுகிறது. தோட்ட நிலங்களில் சாகுபடி செய்வது அபூர்வம். முறுகுபதமுள்ள பசளைமண் மிகவும் திறமானது. சுக்கான் சம்மந்தமுள்ள பூமியும் திறந்தான். பொதுவாய் 10, 11 மாதகாலம் பாசனத்திற்கு ஜலம் அகப்படக்கூடாத பூமிகளில் கரும்பு சாகுபடி பண்ணலாம். இந்திரிய வஸ்துக்கள் அடங்கிய பூமிகளும் சிலாகிக்கத் தகுந்தவை. ஆனால் இவ்வித பூமிகளில் கரையான்களின் உபத்திரவம் ஜாஸ்தியாயிருக்கும். தோட்டங்களும் செழுமையான பசளை மண் பூமிகளும் கரும்புக்கு முதல்த்தர நிலங்கள்.

* * *

சென்னை பிரஸிடெண்ஸி காலேஜில் புரொபெஸராயிருந்த டாக்டர் எஸ். சத்தியநாதன் என்பவர் எப்பிரல்மீ 4உ புதன்கிழமையன்று ஜப்பான்